விலை 20/=

ISSN-2613-828X

# யாழ் களரி

www.yarlgallery.com
yarlgallery@gmail.com

உதயம்: 01 ஆவணி 2018 களரி: 08

## நல்லூர் ஆலய சிறப்புக்கள்






## மடுமாதா ஆலய சிறப்புக்கள்

## ஓ மரணித்த வீரனே...



## செம்மொழிக் காவலனே!



# மக்களை வருத்தும் போராட்டங்கள் பின்னணி யார்?



நீ உருவாகி பிறரை உருவாக்கு

# சமூகத்தில் தற்கொலை சொல்லும் செய்தி என்ன?

**" அன்புக்குரியவர்களுக்கு உதவ வேண்டிய ஒருவர், அதற்கு எதிராக தற்கொலை செய்து கொள்வதன் மூலம் தன் அன்புக்குரியவர்களின் வாழ்நாள் முழுவதும் பெரும் துன்பத்தை ஏற்றுகிறார்"**

N.BA சுதர்சன்
உளவளத்துணையாளர்
மற்றும் உளசமூகப் பணியாளர்

உலகில்தற்காலத்தில்தற்கொலைகளும்தற்கொலைமுயற்சிகளும்தவிர்க்கமுடியாதசமூகமற்றும் உளவியல்பிரச்சினைகளாகஅதிகரித்துச்செல்கின்றன. மனஅழுத்தம். மனநலப்பிரச்சினைகள், மோசமான குடிப்பழக்கம், சமூகத் தொடர்பின்மை மற்றும் அறியாமை, குடும்பப் பிரச்சினை மற்றும் கொடியநோய்கள், வறுமை, கடன் தொல்லை, காதல்தோல்விகள், இளவயது திருமணம் என்பவை இப்பிரச்சினைக்குக் காரணமாகக்கொள்ளமுடியும்

இன்றையசமூகப்பிரச்சினைகளில்முக்கியஒன்றாக தற்கொலை காணப்படுகின்றது. பொதுவாக மனிதன் தனக்கு கிடைக்கக் கூடிய அனைத்து வழிகளையும் பயன்படுத்தி தன்உடல்நலத்தைக் காத்து வாழ ஆசைப்படுகின்றான். தன்வாழ்வில் ஏற்படும் தீங்குகளை தடுத்து தன் ஆயுளை நீட்டி வாழஆசைப்பட்டாலும்கூட,இன்றுஇதுசாத்தியமற்றதாக இருக்கின்ற நிலையே காணப்படுகின்றது. நாம் நாளந்தம் பத்திரிகை, தொலைக்காட்சி மற்றும் இணையத் தளங்கள் போன்றவற்றைபார்க்கின்றபோதுவாழ்வில் ஏற்படும் தற்காலிக அல்லது திடீரென ஏற்படும் மனவெழுச்சி, சிக்கல்களிலிருந்து தப்பித்துக் கொள்ள அல்லதுதீர்வாக மனிதன் தற்கொலை செய்யும் செய்திகளை அறியமுடிகின்றது. அதிலும்எதற்காகதற்கொலைசெய்கின்றோம்என்றுதெரியாதஅளவிற்குதற்கொலைகளும்தற்கொலைமுயற்சிகளும்நிகழ்வதைஅறியலாம்.

தற்கொலைஎன்றால்என்ன? அதற்கான காரணங்கள்பற்றிபல்வேறுஅறிஞர்கள்ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இலங்கையிலே அண்மைக்காலங்களில்இடம் பெற்ற யுத்தம் காரணமாக பலஆயிரம் உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன. தவிரவும் பல்வேறு ஆட்கடத்தல்கள், துப்பாக்கிச் சூடுகள், பொருளாதார



நெருக்கடிகள், சொத்துக்கள் சீரழிப்பு, மற்றும் பாலியல் வன்கொடுமைகள் என்பனவும் இடம்பெற்றறன. இதன் விளைவாக எழுந்த எதிர்காலம் பற்றிய அச்சம் மக்களை தற்கொலைக்கும், தற்கொலை முயற்சிக்கும் தூண்டியுள்ளதைஅறியலாம். அத்தோடு, மக்களின் வாழ்வாதார சிக்கல்களும் அதிலும்வறுமைநிலை, கடந்தகால போர் தற்கொலைக்கு தூண்டிய அடிப்படையான காரணமாக அமைந்தது.பொதுவாக, ஒவ்வொரு மனிதனும் சந்தோஷ மாகவும் நிம்மதியாகவும் வாழ்வதற்கு முயற்சி செய்கின்றான். மனிதன் இறப்பிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் ஆசைப்படுகின்றான். அதற்காக பல்வேறுஉடல், உளச்சார் பாதுகாப்பு உத்திகளை மேற்கொண்டு வாழ்நாளை நீடிக்கின்றான். மாறாகசிலர் பல்வேறு நெருக்கடிகள் காரணமாக தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்டுவாழ்நாளைமுடித்துக் கொள்வதைக் காணலாம். என்னால்முடியாது, என்னால் சாதிக்கமுடியாது, இதுஓர்அவமானம், இனி எதுவுமில்லை போன்ற எதிர்மறை மனநிலைகளை முகாமை செய்ய முடியாத நிலையே வெளிப்படுத்தி நிற்கின்றனர். இது மனிதனின் ஓர்எதிர்மறை மனதினைக் காட்டுகின்றது. இன்று தற்கொலை செய்து கொள்வது பொதுவானதும் காலவரையறையற்றதுமான தானவிடயமாகக்காணப்படுகின்றது

கடந்த 2007ம்ஆண்டுவெளிவந்த உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கை, உலகிலேயே ஆயிரத்திற்கும் அதிகமானோர்தினந்தோறும் தற்கொலை செய்து கொள்கின்றனர் எனக் குறிப்பிடுகிறது. சராசரியாக ஒவ்வொரு நாற்பது செக்கன்களுக் கும ஒருவர் தற்கொலை செய்து கொள்கின்றனர் எனப் புள்ளி விபரங்கள் விபரிக்கின்றன. அதிகமான தற்கொலைச் சம்பவங்களானது 14 தொடக்கம் 30 வயதுக்குட்பட்டவர்களாலேயே மேற் கொள்ளப் படுகிறது. இன்று உலகளாவிய ரீதியில் தற்கொலையானது இறப்புக்கு காரணமாகின்ற முக்கிய காரணிகளுள் ஒன்பதாவது இடத்தில் காணப் படுகிறது. தற்கொலை செய்ய நினைக்கும் பலர்வேறு வழியேதும் இருப்பதாக தெரியவில்லை எனக் கருதுகின்றனர். அந்தக்கணத்தில் மரணம் மட்டுமே தீர்வாக அவர்களுக்குத் தெரிகிறது. மேலும் அவர்களது தற்கொலை உணர்வுகளின் தீவிரத்தை மிகவும் கீழாக மதிப்பிட்டுவிடக் கூடாது. அவை உண்மையா னவை, சக்தி வாய்ந்தவை மற்றும்உடனடியானவை. இதனடிப்படையில் சமூகக்காரணிகள், உளவியல் காரணிகள் மற்றும் பொருளாதாரக் காரணிகள் என்பன தெளிவு படுத்தப் பட்டுள்ளது.

இதனையடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது.குறிப்பாககாதல்தோல்வி, பக்குவப்படாத மனநிலை, மனவழுத்தம், பொருளாதார நெருக்கடி, தீராதகடன்தொல்லை, அதிகரித்த வட்டியில் கடன்பெறுதல், குடும்பத்தகராறுகள், இளவயதுதிருமணம்ஏற்படுத்தும்பாதிப்புக்கள், படிப்பிற்கேற்ப வேலையின்மையால் ஏற்படுத்தும் தாக்கம், எதிர்பார்த்த பரீட்சை பேறுகள் வராததினால் ஏற்படுத்தியதாக்கம், அளவுக்கதிமான சீதனக் கொடுமை, தவறானபாலியல்உறவு, தவறான கருத்தரித்தல், ஆடம்பரவாழ்க்கை, மது போதைபாவனை, விரும்பப்படாத திருமணம், வெளிநாட்டுத் திருமணங்கள், சாதி மனப்பாண்மை, அரசியல்வாதிகளின் செல்வாக்கு போன்ற பல்வேறு காரணங்களைக் குறிப்பிடலாம். இத்தகைய காரணிகளின் தாக்கத்தினால் தற்கொலை மற்றும் தற்கொலை முயற்சிகள் இடம்பெற்றிருப்பதனை அறியமுடிந்திருக்கின்றது. தொல்லை போன்றவற்றினால் வடக்கு கிழக்கு மாவட்டத்தில் தற்கொலை புரிவது அண்மைக் காலமாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.19ம்நூற்றாண்டில் மேற்குலகில் தற்கொலை பற்றி சமூகவியல் ரீதியானமுதன் முறையாக ஆய்வை மேற் கொண்டவராக எமில்டூர்க்கைம் எனும் சமூகவியலாளர் அடையாளப்படுத்தப்படுகிறார். இவருடைய ஆய்வு ஒழுக்கச் சீர்கேட்டால் ஏற்பட்ட தற்கொலைபற்றியதாகவிருந்தது. மக்களின் நடத்தையை சீர்செய்யும்சமூகவழிமுறைகள் நலிவுறும்போது அத்தகைய சமூகத்தில் வாழ்கின்றவர் உளரீதியாக பாதிக்கப் படுகின்றனர்என எடுத்துக்காட்டினர்.தற்கொலையும் தற்கொலை முயற்சியும் பல நாடுகளில் சட்டத்தின் கீழ்தண்டனைக்குரியதாகும். அதனால், தற்கொலை முயற்சி அறிவிக்கப் படாமலும்பதிவுசெய்யப்படாமலும் மறைக்கப் படுகின்றன. 30 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் விளைவாக பெருமளவான மக்கள் உளரீதியான நெருக்கீட்டைக் கொண்டுள்ளனர். இத்தகைய நெருக்கீடுகள் தற்கொலைக்குதூண்டியுள்ளது. இலங்கையிலும்குடியேற்றதிட்டங்களினால் தற்கொலைகள்பெரும்சமூகப்பிரச்சினையாக உருவாகின. 1950ம் ஆண்டிலிருந்து தற்கொலை வீதங்கள்அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் இளைஞர் மத்தியில் மிகவும் அதிகரித்தது.அமெரிக்காவில் 15 வயதிற்கும் 24 வயதிற்குமிடையில் மரணத்திற்கு தற்கொலைகள் மூன்றாவது காரணியாகவும் அமைந்துள்ளது. 15 வயதிற்கு குறைவான பிள்ளைகள் மத்தியில் தற்கொலை வீதம் உத்தியோக ரீதியாககுறைந்துகாணப்பட்டாலும் வயது குறைந்த குழந்தைகள் தற்கொலை செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. உத்தியோக புள்ளி விபரங்களை விட, உண்மையான எண்ணிக்கை அதனைவிடஇரண்டுஅல்லது மூன்று மடங்கு அதிகமாக உள்ளதாக கணிக்கப் பட்டுள்ளது.அண்மையில்உலகசுகாதாரநிறுவனமானது, 172 நாடுகளின் புள்ளி விபரங்களை ஆராய்ந்து வெளியிட்டபட்டியலின் படி, தற்கொலை மரணங்களில் உலகில் நான்காவது இடத்தை இலங்கை பிடித்துள்ளது. மேலும் வடக்குகிழக்கு பகுதிகளில் யுத்தத்திற்கு பின்னர் தற்கொலைகள் அதிகரித்திருப்பதை அறிய முடிகின்றது. உலக சுகாதார நிறுவனத்தினால் செப்டெம்பர் 10 ஆம்திகதியினை தற்கொலை எதிர்ப்பு தினமாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதையும் அறியலாம். மட்டக்களப்பு மாவட்டத்தில் 2015ஆம், 2016 ஆம் ஆண்டுகளில் 2,323 தற்கொலை முயற்சிகள் இடம் பெற்றுள்ளன எனவும், 79 தற்கொலைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன எனவும், மட்டக்களப்பு தொழில்சார் உளநல உதவி நிலையம் தெரிவித்துள்ளது.

(தொடரும்)




உங்கள் கனவு இல்லங்கள் எங்கள் மூலம் எங்களால் உங்களுக்காக!
தங்களது காணிகளில் தங்களது கனவு இல்லங்களினை
மிகக் குறைந்த செலவுடன் அழகாக நிர்மாணித்துக்
கொள்வதற்கு எம்மை அழையுங்கள்.

- பொறியியலாளர்களின், தொழில் நுட்ப உதவியாளர்களின் நேரடி வழிநடத்துதல், பூரண மேற்பார்வை.
- இரு பரிமாணம், முப்பரிமாணம் (2D,3D) வரைபடங்கள்.
- உலகத் தரம் வாய்ந்த கட்டிடப் பொருட்கள் தரையோடுகள், சுவரோடுகள், தலை சிறந்த வர்ணப்பூச்சுக்கள்,உருக்குக் கம்பிகள், பதப்படுத்தப்பட்ட மரங்களினால் உருவாக்கப்பட்ட கதவுகள், யன்னல் மற்றும் நிலைகள் (முதிரை, தேக்கு, வேம்பு, பாலை).
- வீடுகள், தொழில்சார் வர்த்தக நிறுவனம், தொடர்மாடிக்கட்டிடங்கள், திருமண மண்டபங்கள், நீச்சல் தடாகம், ஆலய நிர்மாணங்கள், தரிசு நிலங்களைத் துப்பரவு செய்தல், சுற்று மதில்நிர்மாணம், வீட்டுப்பூந்தோட்டம், சிறுவர் பூங்காக்கள், இறக்குமதி செய்யப்பட்ட இயற்கையுடன் ஒன்றிணைக்கும் பசும் புல் வகைகள்.
- தகுதி பெற்ற, அங்கீகாரம் பெற்ற நிபுணர்களின் மேற்பார்வை. (Engineer,Charered Accountant,Aarchitect)
- அதி நவீன வரவேற்பறை, படுக்கையறை, சமையலறையை அலங்கரிக்கும் Pantry Cupboards, குளியலறை மற்றும் மேல் நிலை நீர்த்தொட்டிகள்.
- அதி நவீன உள்ளக, வெளிப்புற மேலத்தேய தொழில்நுட்ப வடிவிலான பூந்தோட்டம், நீர் அருவி, சுற்றுமதில், வாகனத்தரிப்பிடம் வடிவமைப்புகள்.
- அதி சொகுசு, அரைச்சொகுசு, சொகுசு வதிவிடங்கள்.
- பழமை வாய்ந்த இல்லங்களினைப் புதுப்பித்தல், அதி நவீன தரத்திற்கு உயர்த்துதல்.
- இலகுக் கொடுப்பனவுகள்.
- குறைந்த நிர்மாணக் கால எல்லை.
- சிநேக பூர்வமான தொடர்பாடல்.
- சட்டபூர்வமான ஒப்பந்தம்.
- அரச அங்கீகாரம் பெற்ற தொழில் வட்டத்தினர்.
- கட்டட நிர்மாணத் தரச் சான்றிதள்.

யாழ் சதீஸ்
எலக்ரோனிக்ஸ் &
வோச் வேக்ஸ்



எலக்ரோனிக்ஸ் பொருட்கள்
விற்பனையும் மணிக்கூடு
திருத்துனரும்



இல.55, 57, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

யாழ் களரி
Website: yarlgallery.com E-Mail: yarlgallery@gmail.com
Tel/Whats App/Viber: 077 6510375

பிரதம ஆசிரியர்: ஜோர்ச் ஜெஸ்ரின் |
பொறுப்பாசிரியர்: வேதநாயகம் சஞ்சீவதனுசன் |
வடிவமைப்பு: மு.சதீஸ்குமார் | ஜோய் கிசோன்
ஓவியம் டொமினிக் ஜீவா
ஆலோசகர் குழு
செ.யோசப்பாலா, எஸ் பெருமாள், எஸ்.யேசுதாஸ், எம்.எல்.லாபிர்
பதிப்பு: யாழ்களரி வெளியீட்டகம், முத்து பிறின்டேர்ஸ்
muthuprint@gmail.com
வெளியீடு மற்றும் தொடர்பு முகவரி: ராகஸ்வரம் கலைமன்றம் |
இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையம்
28/1 A.V வீதி, கொழும்புத்துறை
jaffnarakaswaram@gmail.com

## காணாமல் போனோர் பணியகம் பயனளிக்குமா

சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாகவும் காணாமல் போனோர் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் தொடர் போராட்டம் காரணமாகவும் காணாமல் போனோர் பணியகம் உருவாக்கப்பட்டுள்ளது.

காணாமல் போனோருக்கு நிரந்தர மரணச்சான்றிதழ் வழங்கும் அதிகாரம் மட்டுமே உண்டு காணாமல் ஆக்கப்படுவதற்கு காரணமானவர்கள் கண்டறியப்பட்டாலும் அவர்கள் தொடர்பான தகவல்களை வெளியிடுவதற்கு இந்தப் பணியகத்திற்கு அதிகாரம் வழங்கப்படவில்லை இதன்காரணமாக சட்ட நடவடிக்கை எடுக்கவோ தண்டனை வழங்கவோ முடியாது. எனவே பொறுப்புக் கூறலும் இல்லை இதன் காரணமாக நல்லிணக்கம் ஏற்படுவது கேள்விக்குள்ளாகின்றது.

பாராளுமன்றத்தில் இரண்டு சட்ட மூலங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. முதலாவது காணாமல் போனோர் தொடர்பான பணியகம் அமைக்கும் சட்டமூலம்! இரண்டாவது வலுகட்டாயமாக காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேச சமவாயத்தின் சட்ட மூலம். இதன்படி சனாதிபதி ஏழு ஆணையாளர்களை நியமித்துள்ளார். இவர்களில் இருவர் தமிழர்கள் ஒருவர் மட்டக்களப்பை சேர்ந்தவர்கள். மற்றவர் முல்லைத்தீவைச் சேர்ந்தவர் கடந்த நாட்களின் சர்ச்சைக்கு காரணம் என்னவென்றால் இராணுவத்தின் சட்டப்பிரிவில் கடமையாற்றிய மொஹறாந்தி பீரிஸின் நியமனமே இவர் 2008ஆம் ஆண்டு இராணுவம் எந்த வித மனித உரிமை மீறல்களில் இருந்தும் ஈடுபடவில்லை என்றும் மகிந்த அரசின் சார்பாக சர்வதேசத்திற்து சென்று வாதாடியவர் ஆவார்.

காணாமல் ஆக்கப்பட்டதற்கு பொறுப்பானவர்கள் என மக்கள் கருதும் படையினரில் ஒருவரை பணியகத்தின் ஆனையாளர்களில் ஒருவராக நியமித்திருப்பதனால் சர்சைக்கு ஏற்படுவதற்கு காரணமாயிற்று மற்றும் இவரது கணவர் இறுதி யுத்தத்தில் முக்கிய பங்கு கொண்ட இராணுவ அதிகாரியாவார்

இதில் விசேடஅம்சம் என்ன வென்றால் இந்தப் பணியகத்தின் தலைவராக சாலிய பிரிஸ் என்ற ஜனாதிபதி சட்டத்தரணி நியமிக்கப்பட்டுள்ளமைநல்ல தொரு தெரிவாகும் காரணம் அவர் அரசியல் கைதிகளுக்காகவும் பயங்கரவாத தடைச் சட்டம் அவசரகால தடைச்சட்டம் ஆகியவற்றின் கீழ் தாக்குதல் செய்யப்பட்ட வழக்குகளில் ஆஜரானவர் இவரது தெரிவு நல்ல தொரு தெரிவாக பார்கலாம்

இருந்த போதிலும் இந்த தெரிவுகள் மூலம் காணமல் ஆக்கப்பட்ட உறவுகளின் எதிர் பார்பை எப்படி நிறைவேற்றப் போகின்றது பல எதிர்ப்புக்கள் மத்தியில் நிறைவேற்றப்பட்ட சட்டம் சர்வ தேசத்திற்கு அளித்த வாக்குறுதியின் படியே இச் சட்ட மூலங்கள் நிறைவேற்றப பட்டுள்ளதும் குறிப்பிடத் தக்கதாகும். காணமல் ஆக்கப்பட்டோரை தேடி அலைந்து கொண்டிருக்கும் தொடர் போராட்டங்கள் நிறைவேறுமா? இந்த சட்டத்தின் படி காணமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான முடிவு எப்படி இருக்கப் போகிறது...

காணாமல் போன நபர் இறந்து விட்டார் அல்லது கொல்லப்பட்டு விட்டார் என்ற முடிவுக்கு வந்தால் மரணச் சான்றிதழ் ஒன்றை வழங்கவே இந்தப் பணியகத்தால் முடியும். அல்லது போரில் காணாமல் போனஒருவர் தேடப்பட்டால் அவர் இருக்கிறாரா? இல்லையா? என்பதைச் சொல்லமுடியும். இருக்கிறார் என்றால் அவர் எங்கே இருக்கின்றார் எப்படி இருக்கின்றார் என்பதை கூறமுடியும் இல்லை என்றால் அவர் இறந்து விட்டார் என்ற சான்றிதளை வழங்கமுடியும் இது இரண்டும்தான காணாமல்போனோர் பணியகத்தின் கடமை.

காணாமல் போகச் செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவோ பாதிக்கப்பட்டவர்களுக்கு நஸ்டஈடுவழங்கவோ இந்தப் பணியகத்தின் சட்டமூலத்தில் குறிப்பிடப்படவில்லை. பொறுப்புக்கூறல் என்பது இந்தப் பணியகத்தின்மூலம் நடைபெறுமாகயிருந்தால் நல்லிணக்கம் சாத்தியம் ஆகும். அமெரிக்கா, ஐ.நா மற்றும் ஏனைய நாடுகளின் நோக்கம் சட்டமூலத்தில் பொறுப்புக்கூறல் பிரிவு உள்ளடக்கப்கடல் வேண்டும் என்பதே, இதனை நிறைவேற்றுகின்றோம் சட்டப்படி நடக்கின்றோம் என்பதை பறைசாற்றவே இந்தப் பணியகம் உருவாக்கப்பட்டுள்ளது.

# விடுதலைக்குப் போராடும் 4

# ஈழத்துத் தமிழ்மக்கள்

## உரிமை கேட்கும் உரிமை அற்ற தமிழர்கள் -2

பரமபுத்திரன்

புவியில் வாழும் விலங்குகளில் நன்றி உள்ள விலங்கினம் என்றால் அது நாய்தான் என்று சொல்வார்கள். ஒரு இல்லத்தில் வளர்க்கப்படும் நாய், அந்த இல்ல உரிமையாளருக்கும், அதே இல்ல உறுப்பினர்களுக்கும் மட்டுமே நன்றியைக் காட்டுமே தவிரஎல்லா மனிதர்களுக்கும் அல்ல. அதுவே அடுத்த மனிதனைக் கண்டால் குரைக்கும், எதிர்க்கும், தனது முழுமையான எதிர்ப்பைக்காட்டும். அதுமட்டுமல்ல தனது சைகைகளை எழுப்பி தனது உரிமையாளனை அழைத்து புதிய மனிதனைக்காட்டியும் கொடுக்கும். இதற்கும் மேலாக தனது இனமான இன்னுமொரு நாய் தன் வீட்டிற்குள் நுழைந்தால் அல்லது நுழைய முற்பட்டால் அந்த நாயை பலமாக எதிர்க்கும். இது நாய்களிடம் காணப்படும் தனித்துவ குணம். தனது உரிமையாளர் மீது வைத்துள்ள விசுவாச குணம். நான் நாய்களை பற்றி மட்டுமே பேசுகிறேன். தவறாக எண்ண வேண்டாம்.

இன்றைய காலகட்டம் பற்றி சிந்தித்து பாருங்கள். தமிழ் மக்களிடையே எழுச்சி கொண்ட இளைஞர்கள் கூட்டுச் சேர்ந்து அமைத்த தமிழர் படைகள் அல்லது இயக்கங்களை கட்டுப்படுத்தும் நோக்கில்தான் சிறீலங்காஇராணுவம் கரையோரங்களில் இருந்து நகர்ந்து ஊர்மனைகளுக்குள் முகாம்களை அமைத்தது. பின்னர் புலிகள் மட்டும் நிலைத்துக் கொள்ள ஏனைய இயக்கங்கள் அல்லது அமைப்புக்கள் அரசுடன் கூட்டுச்சேர்ந்து தமிழர் உரிமைக்காக போராடின, சனநாயகத்தில் இணைந்தன. அதன் விளைவுகளையும் தமிழர்கள் அனுபவித்தார்கள். ஆனால் 2009இல் புலிகள் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டனர் என்று சிறிலங்காவில் ஆட்சியிலிருந்த மகிந்த ராஜபக்சவினால் அறிவிக்கப்பட்டு போர் முடிவிற்கு வந்ததாக சொல்லப்பட்டது. அப்படியென்றால் இன்னும் ஏன் இராணுவம் வடக்கு, கிழக்கில் ஊர்மனைகளுக்குள் நிலைகொண்டுள்ளது? சிறிலங்காவின் அரசியல் கட்டமைப்பின் பிரகாரம் பாராளுமன்றில் தமிழர் சார்பான கட்சிகள் பெறக்கூடிய அதி உயர் அரசியல்நிலை எதிர்க்கட்சி என்ற உயரம். அந்த உயர்நிலை வந்தும்கூட இராணுவத்தை நகர்த்தும் பலம் ஏன் இல்லை? அரசுடன் இணைந்து செயற்படும் தமிழ் சனநாயக அமைப்புகள்கூட தமிழரின் இந்த அவலநிலையை மாற்றும் சக்தியற்றுள்ளது. ஏன்? சிந்தித்தால் எமக்கு பலம் எதுவும் இல்லை என்பது நன்கு புலனாகும். பாராளுமன்றின் பொய்மை தெளிவாகத்தெரியும். வெறும்பேச்சு அரசியல்தான் மிச்சமாக உள்ளது என்ற உண்மை விளங்கும். இதை தேசியத்தலைவர் பிரபாகரன் மொழியில் சொல்வதானால் ஐம்பது பேர் சேர்ந்தால் விவாதிக்கலாம், ஐந்துபேர் சேர்ந்தால் சாதிக்கலாம். விடுதலைப்புலிகள் சாதிப்பதில் கவனம் செலுத்தினார்கள். இதனால் சனநாயக வாதிகள் வெறுத்தனர். இப்போது யாழ்ப்பாணம் முற்றவெளிகூட சிங்களவனின் மயானமாகிறது. பிக்குவின் உடல்தகனத்தின் மைதானமாகிறது. தமிழன் அமைதியாக வேடிக்கை பார்க்கலாமே தவிர வேறு யாது செய்ய முடியும்.

வடக்கு, கிழக்கில் இன்னும் இராணுவம் தொடர்ந்து நிலைகொள்ளக்காரணம், சிங்கள அரசின் அனுபவ பாடம் தான் என்பதே உண்மை. அது என்னவென்றால், விடுதலைப் புலிகளின் போராற்றல் உயர்வு நிலையில் இருந்த காலத்தில் பல இராணுவவீரர்கள் படைகளை விட்டு வெளியேறினார்கள் அல்லது ஓடினார்கள். அதுபோரின்போதும், பிறவேளைகளிலும் அரசிற்கே தெரியாமல் தங்கள் உயிரைக்காக இராணுவம் மேற்கொண்ட தற்காப்பு. இந்த படைவீரர்களில் வெளிநாடு சென்று தொழில் புரிந்த வீரர்கள் மற்றும் ஊருக்குள் ஒழித்து வாழ்ந்த இராணுவவீரர்கள் என பலவகையுண்டு. அதன்பின் அரசின் கண்காணிப்பின் படி தெற்கில் அல்லது சிங்கள மக்களிடையே நடந்த அதிக குற்றச்செயல்கள் படையிலிருந்து தப்பி ஓடிய அல்லது விலகிய இராணுவவீரர்களாலே நிகழ்த்தப்பட்டுள்ளது. இந்தபுள்ளிவிபர அடிப்படையில் நோக்கும்போது, இங்கிருக்கும் இராணுவ வீரர்களை தெற்குக்கு அழைத்து அங்கு அவர்கள் சிங்களரை தொல்லைப்படுத்துவதை சமாளிக்கமுடியாது. அதிலும்விட வடக்கு கிழக்கில் முடக்கிவிட்டால், தமிழர்களுடன் விட்டுவிட்டால் அரசிற்கு எந்த தொல்லையும் இல்லை. இராணுவம் செய்யும் எந்த செயலுக்கும் நியாயம் சொல்லிவிட்டால் போதும் என்று அரசு முடிவெடுத்து இராணுவத்தை வடக்கு கிழக்கில் இன்னும் வைத்திருக்கிறது. இதற்கு நிறைய கதைகள் உருவாக்கலாம். புனர்வாழ்வு பெற்றவர்கள் கண்காணிக்கப்படவேண்டும். விடுதலைப்புலிகளை தலை தூக்கவிடக்கூடாது. இப்படிப் பல. எனவே இராணுவமும் இருக்கும். தமிழர்க்கு துன்பமும் கிடைக்கும். சிங்களர்க்கு தொல்லையும் இல்லை. அரசிற்கும் நிம்மதி. இதுதான் எங்கள் நிலை.

விடுதலை வேண்டுவது, உரிமை கேட்பது என்பது உலகில் எந்த ஒரு இனமும் செய்யக்கூடாத தவறு. அதிலும் தமிழர் கேட்கவே கூடாது. அவ்வாறு கேட்டால் இராணுவ வன்முறைதான் பதிலடி. நன்றாக அவதானியுங்கள், பயங்கர வாதிகளான புலிகளின் பிடியிலிருந்து தமிழ் மக்களை மீட்டதாக சொல்லிய மகிந்த ராஜபக்ச, அடுத்து தேர்லில் வென்று பாராளுமன்றம் சென்ற உறுப்பினர்களுக்கே சொல்லிவிட்டார். புலிகள் கேட்டதை யாரும் கேட்கக்கூடாது அவற்றையெல்லாம் தமிழர்க்கு தரமுடியாது. அப்படியென்றால் புலிகள் விடுதலைப்போராளிகள் தானே. இந்த வார்த்தைகளைசமாதானத்தை விரும்பும் உலக நாடுகள் ஏன் விளங்கிக் கொள்ளவில்லை. ஒவ்வொரு இனங்களும் உரிமையுடன் வாழவேண்டும் என்று கொந்தளிக்கும் அமைப்புகள் ஏன் புரிந்துகொள்ளவில்லை. காரணம் தமிழர்களுகென்று உண்மையான பலமான அமைப்பு எதுவும் கிடையாது. புலிகளால் ஏற்படுத்தப்படும் தனிநாடு, தனியரசு நிறுவப்பட்டால் உலகில் தமிழனும் பலமாக மாறிவிடுவான். அது தடுக்கப்பட வேண்டும். தூர நோக்கற்ற, சுயநல அரசியல் தன்மைகொண்ட தலைவர்கள் உள்வாங்கப்பட்டால்தமிழரின் எண்ணங்களை சிதைப்பது சுலபம் என்பதே சிங்கள அரசின் நீண்டகால நோக்கமும், அனுபவமும், ஆகும். அதுஎவ்வாறு நடந்ததுஎன்று தொடர்ந்து பார்ப்போம்.

## "ஓ... மரணித்த வீரனே" யாழ் ரமணாவுக்கு ஓராயிரம் அஞ்சலிகள்



யாழ் ரமணன் என்று அன்பாக அழைக்கப்படும் இராஜேந்திரன் இராஜேஸ்வரன் யாழ் மத்திய கல்லூரியின் பழைய மாணவனும் பிரபல சட்டத்தரணி, இசை அமைப்பாளர், இயக்குனர் ராஜன்ஸ் இசைக்குழு அவர்கள் தனது பயணத்தை முடித்துக் கொண்டார்.

மாற்றுத்திறனாளியாக இருந்தும் இவ்விதமாக சாதனை நிலைநாட்ட முடியும் என முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர். டான் தொலைக்காட்சியில் இவரைப் பார்த்திருக்கலாம். அல்லது இவரது இசைநிகழ்வில் பார்த்திருக்கலாம் ரசிகர்கள், ஆனால் ஊடகப்பணியை 1990 இல் யுத்த நெருக்கடி காலத்தில் "உதயன்" பத்திரிகையின் உதவி ஆசிரியராக துணிச்சலோடு பணியாற்றியவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

"ஓ... மரணித்த வீரனே..." என்ற விடுதலைப் பாடலை எழுதி, இசையமைத்து தேசியத்தலைவர் பிரபாகரனால் பாராட்டி கௌரவிக்கப்பட்டவர். இசைக் கலைஞர்களால் பெரிதும் மதிக்கப்படுபவர். அன்னாருக்கு யாழ் களரியின் ஓராயிரம் அஞ்சலிகள்.

# யாழ்ப்பாணச் சரித்திரத்தில் நாகர் காலம் 02

விஜயகுமாரன் ஏறி வந்த மரக்கலம் தாமிரபர்ணி யென முன்னொருகாலத்தில் அழைக்கப்பட்ட இலங் கையின் வடமேற்குப்பகுதியில் ஓரிடத்திலும் மற்று இரு கப்பல்களில் ஒன்று நக்கவார தீவாந்தரத்திலும் மற்றொ ன்று மகிந்த தீபம் அல்லது மகில தீபம் என்னுமிடத்திலும் சென்றடைந்ததென மகாவம்சத்தில் சொல்லப்பட்டி ருக்கிறது. ஆனால் ஏறி வந்த மரக்கலம் இப்பொழுது மா தோட்டம் என்றழைக்கப்படும் மாந்தையிலோ அன்றி ருந்தம்பலை என்னும் பெயருள்ள இடத்தையுடைய கீரிமலையிலோ வந்தடைந்திருத்தல் வேண்டும் என்பது எமது துணிபு. எனினும் பிற்கூறிய இடத்தில் இறங்கிய படி யாற்றான் கதிரமலையில் வசித்த நாகவரசனுடன் நட்புக் கொண்டு இலங்கையிற் பல விடங்களிலும் கிலமாய்க் கிட ந்த கோயில்களைப் புதுப்பித்தும். புதிய ஆலயங்களைக் கட்டுவித்தும் வந்தான் என்னும் கர்ண பரம்பரைக் கதை மயில் வாகனப் புலவரால் தனது யாழ்ப்பாண வைபவ மாலையில் கொள்ளப்பட்டிருக்கின்றது. 3வது மரக்கலஞ் சேர்ந்தவிடம் மகிலதீவ மென்று பிழையாக வரையப்ப ட்டது. அது மகிஷதீபமாகிய எருமைத்தீவாக இருக்க வேண்டும் அவ்விடத்தில் இறங்கிய கலிங்கர் தாங்கள் சிங்கை நகர் விட்டு வந்த நகராகிய சிங்கபுரத்தின் பெய ரை அவ்விடத்து கிட்டு வழங்கிய வந்தபடியாற்றான் பிற்கா லத்திலே அந்நகர் யாழ்ப்பாண இராசதானியாய் வந்தபின் சிங்கை நகர் என்னும் பெயரால் அழைக்கப்பட்டது. இப் பெருநகர் அழிந்து மணலால் மூடப்பட்டிருக்கும் இடத்தை பருத்தித்துறைக்கு தெற்கே வல்லிபுரக்கோயிலுக் கண்மையில் இன்றும் காணலாம்.

விஜயகுமாரன் வருவதற்குமுன் இலங்கையிலிருந்த நாகரும். இயக்கரும் சைவசமயிகளாயிருந்தும் இயக்க அரசனாகிய இராவணன் சிவபக்தனாயிருந்தும் இயக் கர்களுக்குள் பைசாசவணக்கமே அதிகரித்திருந்தது. இக் காரணத்தால் இயக்கன் என்னும் பதம் சிங்களத்தில் பை சாம் என்னும் பொருளைக் கொண்டது. விஜயகுமாரனும் அவனுடன் வந்த கலிங்கர்களும் சைவசமயிகளே. அத னால் விஜயன் இலங்கையின் வட கரையில் கீரிமலைச் சாரலிலே பிற்காலத்தினரால் நகுலேஸ்வரம் என அழைக் கப்பட்ட திருத்தம்பலேஸ்ரம் என்னும் சைவாலயத்தையும் தென் கரையிலுள்ள தெய்வாந்துறையிலே சந்திரசேகரன் கோயிலையும் கிழக்கே தம்பலகாமத்திலே திருக் கோணேஸ்வரர் கோயிலையும் கதிர்காமமாகிய கதிர மலையிலே முருகவேளுக்கோராலயத்தையும் கட்டுவித் ததுமன்றி மாதோட்டத்திலே கிலமாயிருந்த திருக்கேதீஸ் வரர் கோயிற்திருப்பணியை திருத்தமுறச் செய்வித்தான். திருக்கேதீச்வரமும் சலாபத்திலுள்ள முன்னீச்சுரமும் விஜய னுக்கு முன்னுள்ள புராதன ஆலயங்கள். இராவண சாம்ரா யத்தின் பின் இராமபிரான் முன்னீஸ்வரத்திற்றங்கி அங்கு றையும் பெருமானை வணங்கிச் சென்றாரென ஓர் ஐதீகம் உண்டு.




விஜயன் இவ்வாலயங்களைக் கட்டும் நோக்கமாகச் சென்ற காலத்திற்றான் இயக்க குலக்கொடியாகிய குவே னியை சந்தித்து அவளை மணந்து அவள் துணை கொண்டு இயக்க வரசனை வென்று தம்மன்னாவெனும் இடத்தை இராசதானியாக்கி இயக்கர்களுக்கு அரசனாயினான். பின் குவேனியை வெறுத்து அவளையும் அவள் வயிற்றிற் பிற ந்த இருகுழந்தைகளையும் விலக்கி விட்டு யாழ்ப் பாணத்துக் கதிரமலையில் அரசாண்ட நாகவரசன் மகளை மணந்தான். குலனும் நலனும் தெரியாத இவ்வியக் கர்கோனுக்கு பாண்டியன் தன் மகளை மணமுடிப்பித்தான் எனும் சிங்கள இதிகாசக்கூற்று நம்பும் தகமைத்தன்று. இதற்குப்பின் இலங்கையை அரசாண்ட பெரும்புகழ் படைத்த வென்றிசேர் வேந்தரும் பாண்டியனிடத்திற் பெண்ணெடுத்தாரில்லை. ஆனால் கதிர மலையிலும் களினியிலும் வசித்த நாகர் குலக் கலப்பே அதிகரித்து வந்தது. விஜயனுக்குப் பின் சில ஆண்டுகளுக்குள் இலங்கை அரசர்கள் கலிங்க குலம் நீங்க நாகர் குலத்தவரானார்கள். அக்காலத்தில் இலங்கையில் வசித்த நாகரும் இயக்கரும் "எலு" வென்று இக்காலத்தில் பிழைபட "ஈழு" வென்றும் நிறைவற்ற பாசையே பேசி வந்தார்கள். அதனால் இலங்கைக்கு ஈழம் என்றும், ஈழ மண்டலம் என்றும் பெயர் உண்டாகியது. "ஈழம்" "சீழம்" என வருமிச் "சிஹழம்" "சிங்களம்" என மாறியது. "சீழம்" என்னும் பெயரிலிருந்தே "சீழம்தீப்" "சேரபாண்டி" என்னும் அரபிய நாமங்களும். "சிலாங்" "சிலோன்" என்னும் மேலைத் தேயத்தவரிட்ட பெயர்களும் வந்தன. "சிஹ" வென்னும் பாலி பாஷைச்சொல் "சிங்கம்" என்னும் பொருளையுடையதால் "சிஹழம்" சிங்களமாக மருவியது அதிசயமல்ல. விஜயன் மிருகேந்திரனாகிய ஒரு சிங்கத்தின் வழித்தோன்றலான படியால் அவன் வழித்தோன்றினோரும் சிங்களவர் என்றழைக்கப்பட்டார்கள். என்னும் மகாவம்மிசக்கூற்று உண்மையுமின்றிச் சிங்களசாதியாருக்கோர் பெருமையுந் தராத வெற்றுரையாதல் காண்க.

விஜயனுக்குப் பின்னரசாண்ட அவன் குலத்தோன்ற லாகிய பாண்டுவாசனுக்கு மகத நாட்டிலிருந்து கொண்டு வந்த பெண்ணுடன் வந்த அரசிளங்குமாரரில் ஒருவனாகிய அனுராதன் என்பான் அநுராதபுரத்தை இராசதானியாக்கி னான். அவ்விடத்தையே பிற்காலத்தரசர்களும் இராசதானி யாக்கி அரசாண்டார்கள். அநுராதபுரத்தரசர்கள் யாழ்ப்பா ணத்துக் கதிர மலையரசர்களுடன் நட்புரிமை கொண்டு விளங்கியதோடு மணவுரிமையும் படைத்து வந்தார்கள். தேவநம்பிய தீஸ்ஸவின் அன்னையும் மூத்தசிவ என்பவரின் இல்லக் கிழத்தியுமாகிய பெண் கதிரமலை நாகர் வம்சத்துதித்தவளே. "திஸ்ஸன்" "நாகன்" என்னும் நாக வம்சப் பெயர்கள், அக்காரணம் பற்றியே மூத்த சிவனின் பிள்ளைகளுக்கிடப்பட்டன.

# அரியாலையின் கலைஞர் தம்பு சிவலிங்கம்

## - யாழ் களரியுடன் ஓர் உரையாடல் -



12 ஆவது வயதில் நகைச்சுவை நாடகத்தில் நடிக்கத் தொடங்கிய தம்பு சிவலிங்கம் (வயது 72) அவர்களை முள்ளி வீதி, அரியாலை 1ம் ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்தோம்.

"தலைவராக இருக்கும் போது தலையாட்டுவினம் பதவியில இருக்கும் வரை தான் பிறகு செய்தபணிகளை மறந்திடுவினம் கருவப்பிலை மாதிரித்தான் கலைஞன் அதன் வாசத்தை எடுத்துவிட்டு தூக்கி எறிந்துவிடுவார்கள்" என்று தனது 60 வருட கலை அனுபவத்தை யாழ்களரியுடன் பகிர்ந்து கொண்டவை பின்வருமாறு.

சாந்தனுடனும் நாடகம் நடித்திருக்கின்றேன். செல்வத்துடனும் பணியாற்றியிருக்கின்றேன். 12 வயதிலிருந்து நகைச்சுவை நாடகங்கள் நடிக்கத் தொடங்கி பின்னர் 'இதயவிளக்கு' , 'தந்தையின் வாக்கு' ஆகிய நாடகத்தை எழுதி நடித்தேன்.

அரிச்சந்திரா , சத்தியவான் சாவித்திரி, அலாவுதீன் போன்ற நாடகங்களிலும் 'பண்டார வன்னியன்' நாடகம் இப்படி பல நாடகங்களில் பல்வேறு இடங்களிலும் நடித்திருக்கின்றேன். குறிப்பாக அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட நிகழ்வுகளில் மரபுவழிநாடகம், இசைநாடகம், நகைச்சுவை நாடகம் போன்றவற்றில் பிரதான பாத்திரமேற்று நடித்திருக்கின்றேன். "இதய விளக்கு" நாடகத்தில் நடித்தமைக்காக நவாலியூர் செல்லத்துரையால் தங்கப்பதக்கம் சூட்டப்பட்டது.

என்று அவரது மகிழ்ச்சியான பயணத்தை கூறியவரிடம் தற்போது என்ன செய்கிறீர்கள் என்று கேட்டோம்.

வயல் செய்கிறனான் கடந்த வருடம் அழிந்து போச்சு மேசன் வேலை முந்தி செய்தனான் இப்ப ஏலாது தற்போது சுண்டல் செய்து நாளொன்றுக்கு 150ரூபா வருமானம். அதிலதான் சீவியம் நடத்துகின்றேன்.

எனது மனைவி ராசாத்தியம்மா (வயது 69) அவரது ஒத்துழைப்புடன் தான் கடந்த காலத்தில் சமூக சேவை, கலைச்சேவை என்று செய்தேன். இப்போதும் என்னுடன் கூட இருக்கிறார்.

உங்களுக்கு் விருதுகள் ஏதும்.....? சிரித்துக்கொண்டே சொல்கிறார்

தேசிய விருதுகளுக்கு நான் போக விரும்பவில்லை. நான் கொண்டு போகப்போறனே.... 1973.01.20 இல் பிறந்த என்ர மகன் பிரபாகரன் காணாமல் போன பிறகு எனக்கு மனம் விட்டுப்போச்சு பாருங்கோ. மகன் பிறந்த ஊரில பிரச்சனையோ இல்லை அவன்ர பெயரில பிரச்சனையோ தெரியவில்லை காட்டிக் கொடுக்கிறவர்களால நடக்கிற அனியாயங்கள் தான் பாருங்கோ 17.07.2007 வெள்ள வானில வந்தவர்கள் கடத்திச் சென்றார்கள். 'டெனிஸ்' மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தில வேலை. மிதிவெடி அகற்றும் பிரிவில் 2002 தொடக்கம் 2007 வரை வேலை செய்தவர். புலிகளுக்கு வெடிபொருட்கள் கொடுத்தவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக பின்னர் அறிந்துகொண்டேன். பிரபாகரனுக்கு மூன்று பிள்ளைகள் தற்போது உயர்தரம் படிக்கிறார்கள். நான் மேசன் வேலை செய்துதான் அவர்களை வளர்த்தனான். கடந்த 07 வருடமாக பாரிச வாதம் நடக்க முடியாமல் இருக்கின்றேன். அதனால் தான் தற்போது சுண்டல் வியாபாரம் செய்கின்றேன்.

பனை தென்னை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் அரியாலை தெங்கு பனை பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவு சங்கம் பனை அபிவிருத்திச்சபை இவற்றில் நிர்வாக உறுப்பினராகவும், தலைவராகவும், ஐக்கிய நாணயச் சங்கம், கூட்டுறவுச்சபை ஆகியவற்றிலும் கௌரவ சேவையாற்றியுள்ளேன். கலைக்கு சேவையாற்றிய ஆயுள்வேத வைத்தியர் சூசைப்பிள்ளை அரியாலையில் பல பகுதிகளை சொந்தமாக வைத்திருக் கிறார் அவருடன் ஈடுபட்டுள்ளேன். தற்போதைய கலைஞன் கவுரியாற் பிள்ளை திருஞானராசாவும் கலைக்கு சேவையாற்றியுள்ளனர். என்றும் மேலும் பல விடயங்கள் உரையாற் றினார்.





## செம்மொழிக் காவலனே!

தமிழுக்கு நீ என்றும் வரம்
அரசியல் அரங்கிற்குள்
ஒருபக்கம் பூ வாயும்
மறுபக்கம் முள்ளாயுமிருந்த
மர்மயோகி நீ

முள்வேலிக்குள் நாம்
முடங்கியபோதிலும்
கண்மூடிப் பூனைத்தவம்
புரிந்த காரணம் யாமறியோம்

முதுமை தழுவிய நின்
மரணத்தில் மகிழும்
மனம் எமக்கில்லை
அஞ்சலிகள் கலைஞனே

விடை பெற்றாய்
முத்தமிழ் காவலனே
இனியொரு பிறவி
உனக்கிருப்பின்
அரசியல் அரங்காடாத
இலக்கிய மனிதனாய்
தமிழுக்காய் மட்டும் பிறப்பெடு

செம்மொழி உனக்காக காத்திருக்கும்
விழி பூத்திருக்கும்
மீண்டும் உன்
திருக்கரத்தில் பிறப்பெடுக்க.....

- வன்னிமகள் எஸ்.கே.சஞ்சிகா -

# யாழ் நகரசபையின் வரலாறு - 02

**14.12.1907** அன்று யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக உள்ளூராட்சித்தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் எஸ்.தம்பையாபிள்ளை, V.கதிரவேலு. V.சபாபதி ஆகியோர் **1908,1909** ஆகிய இரண்டாண்டு காலப்பகுதிக்கு உத்தியோகப்பற்றற்ற
(Un Official Members) அங்கத்தவர்களாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக விளங்கிய அரசாங்க அதிபர் (Official Mmber) உத்தியோகபூர்வ அங்கத்தவராயிருந்தார்.

**1908**ம் ஆண்டு ஜனவரி மாதம் யாழ்ப்பாண உள்ளூராட்சிச்சபையின் முதலாவது கூட்டம் நடைபெற்றது. யாழ்ப் பாண உள்ளூராட்சி சபைக்கூட்டங்கள் யாவும் யாழ்ப்பாண கச்சேரியிலேயே (பழைய கச்சேரி) நடைபெற்றன. இக்கூட்டத்தில் சோலை வரியை இரண்டு வீதத்திலிருந்து மூன்று வீதமாக அதிகரிப்பதெனவும், ரிக்சாக்களுக்கு 1.50 சதம் வரி அறவிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. Notes on Jaffna

**11.4.1908** அன்று நடைபெற்ற கூட்டத்தில் யாழ் நகருக்கான வடிகாலமைப்புத்திட்டம் பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது.

**4.12.1909** அன்று நடைபெற்ற உள்ளூராட்சித்தேர்தலில் சட்டத்தரணி யு.கதிரவேலு சட்டத்தரணி ளு.தம்பையா இந்து சாதனம் பத்திரிகை ஆசிரியர் யு.சபாபதி கப்பல் கம்பனி முகவர் ஜோசப் சொரூபியன்ஆகியோர் போட்டியிட்டனர். இத்தேர்தலில் போரி(Boury) பாதிரியாரின் வாக்கு உள்ளூராட்சித்தலைவர் பிறைசால் நிராகரிக்கப்பட்டது. ஜோசப் சொரூபியன் அவரது கப்பல் கம்பனி முகவர் சந்திரசாகர சட்ட ஆலோசகர் காசிப்பிள்ளை ஆகியோரின் ஆலோசனையின் பிரகாரம் போட்டியிலிருந்து விலகிக்கொண்டார். மூன்று அமர்வு (sitting members)உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். Catholic Guardian

**16.12.1911** அன்று நடைபெற்ற உள்ளூராட்சித்தேர்தலில் திரு. A.கதிரவேலு, S.தம்பாப்பிள்ளை, S.கதிரேசு ஆகியோர் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர். Catholic Gua rdian

**13.12.1913** அன்று நடைபெற்ற உள்ளூராட்சித்தேர்தலில் A.கதிரவேலு, S.கதிரேசு, கந்தையா ஆகியோர் அடுத்தஇரண்டாண்டு காலப்பகுதிக்கு உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

**13.12.1913** அன்று நடைபெற்ற உள்ளூராட்சித்தேர்தலில் A.கதிரவேலு, S.கதிரேசு, கந்தையா ஆகியோர் அடுத்த இரண்டாண்டு காலப்பகுதிக்கு உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

**13.10.1917** அன்று யாழ்ப்பாண உள்ளூராட்சிச்சபை மூன்று வட்டாரங்களாக பிரிக்கப்பட்டது.அவையாவன முதலாம் வட்டாரம் அல்லது மத்திய வட்டாரம் கோட்டை, கரையூர், சுண்டிக்குளி, இரண்டாம் வட்டாரம் அல்லது மேற்கு வட்டாரம் வண்ணார்பண்ணை வடமேற்கு, வண்ணார்பண்ணை வடகிழக்கு, வண்ணார்பண்ணை தென்மேற்கு, சோனகதெரு, நாவாந்துறை, மூன்றாம் வட்டாரம் அல்லது கிழக்கு வட்டாரம் நல்லூர், திருநெல்வேலி மேற்கு, சிவியாதெரு கிழக்கு, சிவியாதெரு மேற்கு, கொழும்புத்துறை கிழக்கு மேற்கு ஆகியன.

- ந.பரமேஸ்வரன் -


மண்ணகப் பிறப்பு 13.08.1918



விண்ணகப் பிறப்பு 12.02.1999

சித்த ஆயுர்வேத ஹோமியோபதி
வைத்தியர் அமரர்
K.ஆசைப்பிள்ளை அவர்களின்
100 வது பிறந்த தினத்தை
முன்னிட்டு திறந்த பிரிவாக
மாபெரும் குறும்படப் போட்டி
2018
கலைத்துவம் மிக்கதும் சமூக
மாற்றுச் சிந்தனைகளையும்
கருப்பொருளாகக் கொண்ட நீங்கள்
தயாரிக்கும் குறும்படங்களுக்கான
விண்ணப்பங்களை 10.12.2018 ற்கு
முன்னர்
"றொசாறியஸ்"
26, ஆனந்தன் வடலி வீதி
கொழும்புத்துறை.
என்னும் முகவரிக்கு அனுப்பி
வையுங்கள்
தொடர்புகளுக்கு:-0776510375


# வேலியே பயிரை மேயுதோ?

என்ன விசு அண்ணே முகம் வீங்கி கலக்கத் தோட வாறியள் ஏதும் நோய்நொடி தொத்திற்றுதோ

தில்லையருக்கு நம்ம நாட்டு நிலையள் தெரியாதது போல பேசுறீர். பகல் என்ன இரவென்ன அமைதியா தூங்கி எழுந்தாத் தானே, தினம் தினம் பெண் பிசாசுகள் சிறுக்சுகள் வைச்சு இருக்கிற வீட்டில கலக்கத் தோட இருக்கிறதால கலங்கித் தவிக்கிறத இப்ப யாரிட்ட சொல்லுறது.

இது என்ன புதுக்கதை சொல்லுறியள் பாதுகாப்புக்கு காவற்துறை மட்டுமா இராணுவம், துப்புதுலக்கிற பலரும் குவிஞ்சு கிடக்கிற நம் நாடு நல்லாட்சி நாட்டி லயா இது எல்லாம்.

ஓம் ஓம் பாதுகாப்பு பெரியவர் வந்து போன பிறகு தானே புதுப்புது மர்ம மனிதர் நடமாட்டங்களும் வீடு புகுந்து தாக்குதலும், கொள்ளையளும், கொலைய ளும் நடக்குது ஆனா வீதியில வாகன மறிப்பு வரியற வீட்டில இருக்கிற ஆர்வம் வளிப்பறி வாள்வீச்சு கலாச் சாரம், கட்டுப்பாடில்லாத நல்லாட்சி நாடாகப்போயிற்று . இதுவா நல்லாட்சி எண்டிருந்தா எப்படித்தான் பயப் பிராந்தியில்லாமல் தூங்குவாங்க சொல்லண்ணே எண் ட கணேசுவின் ஏக்கக் கதையயை .

ஒன்றும் பேசாது ஒதுங்கியிருந்து சுருட்டை சுவைச்ச ராசுவின்வாயால் சில வார்த்தைகள் சிந்திக்க வைத்தது. பூனைகள் பால் குடிக்க வைச்சிட்டு எலிகளோ கும்மாளம் போடுது பார் 'இது எல்லாம் நடக்குமென்று போர் நடந்த தேசங்களை ஆராய்ந்த எங்கட உளவியலாளர்கள் சொன்னதை யாருமே கேக்கயில்ல' இப்ப அனுபவிக்கிற போது தானே எங்கவீட்டிலயும் உணர முடியுது பாருங்க.

கொட்டில்ல வாளேக்க இருந்த அமைதி இப்ப கட்டிடங்கள் உயர்ந்து செல்லுதே தவிர உள்ளங்கள் உயரேல்ல பாரன்.

இது முதல்ல பாத்திருக்க வேணும் பாரு இப்ப வும் றோட்ட போட்டம், பாலம் கட்டினோம், வீடு கட்டு வம் எண்டதில கவன்ம் செலுத்துறம், வாக்குறுதி குடுக் கிறதிலயும் அரசியல் பிரச்சாரமாக இருக்கே ஒழிய காயப்பட்ட உள்ளங்களை ஆற்றுப்படுத்தி மனித மாண் பை மனித நேயத்தை வளர்க்காம கட்டித்தாலையும், வாழ்வாதாரத்தையும் உளக் காயங்களை மறைக்கிற வேலையை செய்து முடிக்கிற வேலையை செய்துட்டு மூடி மறைக்கிறதில அரசியல் நடத்திறதால தான் அடி மனக்காயங்கள் விரக்திகள், வக்கிர உணர்வுகள், வறுமையான சூழல்ல வாழுற மக்களை மயக்கிற போதை வஸ்து,கஞ்சாக்களைக் கொடுத்து சாராயக் கடைய ளைத் திறந்து மகிழ்ச்சிப்படுத்த முனையிறதால தன்மா னமாய் வாழ்ந்ததுகள் தறுதலையாய் திரியிறதுக்கு துணை போறவையள் சரியா கையூட்புல் உழைச்சு சுருட்டி தூண்டுறதில கள்ளர்களே காவலாகி விட்டதால நல்லாட்சி நாடு சுடுகாடாகிப் போகுது பாரென தன் ஆதங்கத்தை விசு வாத்தி விளக்கினார்.

அதுசரி இப்பத்தான் நாட்டு நிலை தெரிஞ்சவர் போல பாகுபாடு பாரபட்சம் காட்டி ஒதுக்கி போட்டமாம் வடக்கிலாக்களை இனி கவனிச்சு கொள்ளப்போறதா தேர்தல் மேடைகளாக்கிய எம் நாட்டுத்தலைவர் இங்க வரேக்கை கதைச்சிட்டப் போறதைக் கேட்டியே கணேசு எண்டதும்

ஓமோம் முன்னைய அரசர்கள் மாதிரி நாட்டில மாதமும் மும்மாரி பொழியேல்லையோ எனக்குத் தெரியாம போச்செண்டு வாக்குறுதிகளால மாலை மரி யாதை வேண்டிக் கொண்டு போகினம். ஏமாந்த நரிய ளும் இந்தப்பழம் புளிக்கும் எனக் கூக்குரல் இட்டு அடுத்த மாகாணசபையளுக்கு ஆள் பிடிக்கத் திரியினம் கண்டியளோ?

வீட்டில உலை ஏறல்ல வீதியில அன்னதானம் வைக்க திட்டமிட்ட மாதிரி நேரத்தோட திட்டமிட்ட சினி மா வசனம் போல தங்கட நாடகத்தை அரங்கேற்றிறதால




- வானம்பாடி -

சீலை கட்டடினதாரு? வேட்டி கட்டனதாரு? எண்ட விவாதம் நடக்கிற மாகாண சபை நாட்டுக்கூத்து பார்க்கிற சனத்துக்கு விளங்கினா சரி. துப்பாக்கியாற்ற பொக்கற்றுக்குள்ள இருக்கு எண் டதில கவனமாயிருக்கினம் சனம்பற்றி கவலை இல்லை இது ஒரு நாடகம் தான் பாரு

எல்லாம் வன் செயல், வக்கிர உணர்வு, நாகரி கமற்ற வார்த்தைகளின் முன் மாதிரியினாலே தான் ஏற்ப டுத்தினம் எண்ட குற்றப்பழி உணர்வு மக்கள் மனதில கோலமிட மீண்டும் மீண்டும் ஒப்பாரிக் கூட்டமாக மோதிக்கலைகிறது உருப்படியாளரின்ர உருப்படாத கதையளப்புத் தான் என தில்லையின் அண்ணனின் பெருமூச்சு அன அச் சூழலை சுட்டெரித்தது.

தம்பி கணேசு பாடசாலை லீவு விட்டுது. இன் னும் கஞ்சா கறுப்பற்ற யாவாரம் பெருகப் போகுதே யொழிய இளசுகள் பற்றி யாரும் கவலைப்படாம லீவுக் குள்ள புதுவாள்வீச்சுக்கு ஆள் சேர வழியாகப் போகுது. இதுபற்றி யாரும் கவலைப்படுறதாயும் இல்ல. அரசியல் மட்டு மல்ல மதத் தலைவர்களும் தங்கட திருவிழா வருவாயில கவனமாயிருக்கிறது நல்லதல்ல. குருக்கன் அடிச்ச வாழையளைப் போல குட்டி வாழையளும் அழி யப்போகுது பார் என விசு வாத்தி கூறியதைக் கேட்டு

விசு அண்ணே எங்கட குடும்பங்கள் பிள்ளையளைப் பற்றிக் கவலையில்ல லீசிங்காரர் வருவாங் களே எண்ட கவலை தான் இப்ப குடும்பத்தில சுவருகள் மின்கம்பங்கள் எல்லாம் காலையில எழுந்தா பவுணுக்கு நாப்பதாயிரம், அம்பதாயிரம் தாறமெண்டு இருக்கிறதுகளும் இல்லாததுகளும் வட்டிக்கு வாங்கி காணியும் ஈட்டில வைச்சு இலங்கை வெளிநாட்டில வச்ச கடனை விட நம்ம நாட்டு சனத்திட்ட வறுகிறதுக்கு வந்த வங்கியளையும் தங்கள் அடைமானம் வைச்சு குடும்பமா சீரழியுது. எல்லாத்தையும் இழந்தாலும் எங்கட இளம் சந்ததிகளை காப்பாற்ற யார் முன்வருவார் எண்ட ஏக்கம் தான் மிச்சம்.

எங்கட சனத்தைக் காக்க வேலிகள் போட்டம் இதை மிஞ்சின பெருவேலியிட்டு பாதுகாக்க எண்டு வந் த வேலிகளும் பாதுகாக்கும் எண்டு நம்பினம். இப்ப வேலிகளே பயிரை மேயிறதைப் பார்த்தா வந்த வெள் ளம் இருந்த வெள்ளத்தையும் அள்ளிச் சென்ற கதையாப் போச்சு பாரன் எண்ட கணேசுவின் கருத்துக்குப் பதில் தேடினர்.

தம்பி கணேசா பேச்சு பல்லக்கு தம்பி கால்நடை எண்டது போலத்தான் எங்கட்ட இருக்கிறவையளும் வந்து போறவையளும் மொட்டந்தலையில குடும்பிகட் டப் பார்க்கினம் மழை வரப்போகுது. இவர்களின்ர பேச்சு 'வரும் ஆனா வராது' எண்டு கடத்திக் கடத்தி கடைசியில எங்களுக்கு வாக்களிச்சா எல்லாம் வரும் எண்டு சொல் ல இருக்கினம் போல

இதைத்தான் சுவாமித்தம்பி பொருத்து வீடு எண் டார். எங்கடையள் பொருந்தாது எண்டிச்சினம் இப்ப இந் தியா சீனாக்கதையளக்கினம். இது விட்டு கதைச்சு முடிய இங்க இருக்கிறவையள் ஆசாரி சொன்னாலும் பூசாரி யார் புதுசாப் பெயரெடுத்து அலைக்களிப்பினம் இதைத் தானே வேலைவாய்ப்பை சொல்லி இழுத்தடிக்கி னம் ஏன் இதைக் கேட்டு சொல்ல ஒருவரும் முன் வரேல்ல தெரியுமா? வாசிகளுக்கு வழி இல்லாட்டி யோசிச்சு ஒதுங்கினம்.

ஒரு கதை தெரியுமோ முந்தி பொருளாதார மையம் கட்ட வெளிக்கிட்டு வவுனியாவில, மாங் குளத் திலயா எண்டு அலைஞ்சு எத்தினை வருசமாச்சு? தண் ணீருக்காக வாய்ப்பந்தல் போட்டு நாடகமாடினது தனக் குத் தனக்கு எண்டா சுளகு படக்குப் படக்கு எண்டுமாம். இதை அவர்களின்ரை வாகன பொமிற் எடுக்கிறதில தங் கட பிள்ளையளுக்கு வேலை எடுக்கிறதில காட்டுற அக் கறை மக்களின்ர தேவைக்காக ஒண்டா சேர்ந்து எதைச் செய்திருக்கினமாம் சொல்லுங்க பாப்பம். மக்கள் எல் லாம் மறந்திடுவினம் அடுத்த முறையிலும் உலக நாடு பாக்குது எண்டு புதுசாய் கதை சொன்னால் நம்ப வைக் கலாம் எண்டவர்களும் வாக்குப் பிச்சைதான் கேக்க வரு வினம் அரசியல்லையும், ஆன்மீகத்தில இருக்கிற எல் லாருமே ஒரு குட்டையில ஊறின மட்டையளா எல்லோ எல்லாமே இருக்கு.

# 500 ஆண்டுகளுக்கு முன் பழமை வாய்ந்த

தொகுப்பு: திரு.சின்கிலேயர் பீற்றர்
26- ஆஸ்பத்திரி வீதி மன்னார்



16ம் நூற்றாண்டில் யாழ்ப்பாணம், யாழ்குடா பிரதேசங்கள், மாந்தை பெருநிலப் பரப்பு, மன்னார்த்தீவு, போன்றன யாழ்ப்பாண இராட்சி யமாக விளங்கின. அக்காலத்தில் யாழ்ப்பாண இராட்சியத்தை சங்கிலியன் என்னும் ஏழாம் பரராச சேகரசிங்கை மன்னன் ஆண்டு வந்தான். போர்த்துக்கேயர் இலங்கையெங்கும் வியாபாரி களாக நடமாடித்திரியுங்காலத்தில் தூய பிரான்சிஸ் கன் சபையினர் மாந்தை நகரில் போதித்து பலரை மனமாற்றியிருந்தனர். இவர்களின் காலத்தில் பல சிற்றாலயங்கள் மாந்தைப் பெருநிலப்பரப்பில் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றில் பிரதான ஆலயமாக மாந்தை மாதா ஆலயம் அமைந்தி ருந்தது. செபமாலை மாதாவென்று தற்போது அழைக்கப்படும் மருதமடு மாதாவின் உண்மை யான சுரூபத்தின் ஆதி இருப்பிடம் மாந்தைப் பிட்டியில் அமைந்துள்ள தற்போதைய லூர்த்துக் கெபி கோவிலடியாகும்.

1544ம் ஆண்டுக்கு முன்னரே பிரான்சிஸ்கன் சபைக் குருக்களினால் மாந்தையில் வைக்கப் பட்ட மாதா சுரூபம் 500 ஆண்டுகளுக்கு மேலாக இன்றும் மடுவில் மடுமாதா என பக்தர்களால் அன்பாக அழைக்கப்பட்டு அருள்மழை பொழிந்து கொண்டிருக்கின்றார். பிரான்சிஸ் சபைக் குருக்கள் 1542ம் ஆண்டு மாதோட்டத்தில் சிலை வழிபாட்டுக்காரர் பலரை மனமாற்றி கத்தோலிக்க விசுவாசத்தில் வளர்த்துள்ளனர். 1544ல் மன்னார் தீவில் வேதசாட்சிகளாய் மரித்தவர்களைத் தவிர ஏனையோர் மாதோட்டத்திற்கு வந்து பிரான்சிஸ்கன் சபையினரின் கண்காணிப்பில் வாழ்ந்தனர். அருட் தந்தை மசேயிற் அ.ம.தி. அடிகளார் 1886ல் மடுவிலுள்ள “கோடேக்ஸ்” (Cordex) என்ற குறிப் பேட்டில் மருதமடு மாதாவின் ஆரம்ப இருப்பிடம் மாந்தை என பரம்பரையாக பேசப்பட்டு வருகிறது என குறிப்பிட்டுள்ளார்.


பேதுரு டி. பென்ரக்சன் எனும் குருவானவரால் 1614ம் ஆண்டு மாந்தையிலேயே ஆரோக்கிய அன்னைக்கென்று ஓர் ஆலயம். கட்டப்பட்டது என வெளிப்படுத்தியுள்ளார். இப்பின்னணியில் மாந்தை திருமுழுக்குத் தொட்டியையும், மாந்தை ஆலய பீடத்தின் முன்னிருந்த நற்கருணை கிராதியையும், மடு அன்னையின் திருச்சுரூபத்தையும், பற்றிய தொன்மையை அறிந்து கொள்ளலாம். மாந்தை திருமுழுக்குத் தொட்டி மாந்தை துறைமுகத்திற்கு அருகாமையில் கண்டெடுக்கப்பட்ட தொன்மை வாய்ந்த திருமுழுக்குத் தொட்டி. தற்போது வவுனியா அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத் தொட்டி கேரளாவிலுள்ள சிரியான் மரபு மீறாத திருச்சபைக் கோவிலில் காணப்படும் திருமுழுக்குத் தொட்டியை ஒத்ததான அமைப்பைக் கொண்டது. இத்தொட்டியின் வெளிச் சுற்றளவு 330 cm ஆழம் 132 cm அதன் தடிப்பு அண்ணளவாக 12.7 cm எனக் கணிக்கப் பட்டுள்ளது. மாந்தை ஆரோக்கிய அன்னை ஆலயம் 1670ல் ஒல்லாந்தர் கைவசமானது.

அவர்கள் இவ்வாலயத்தை தமக்குரிய கூட்டங்களை நடாத்தும் மண்டபமாக பாவித்துள்ளனர். 1834ல் காசிச்செட்டி என்பவர் மாந்தையில் இடிபட்ட ஆலயப் பகுதிகள் இருந்ததாக தனது “சிலோன் கசற்றி” (Ceylon Gazet ) எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இவ்விடத்திலே பீடத்திற்கு முன்பகுதியில் இருக்கும் நற் கருணைக் கிராதியையும், ஒரு சிறிய மாதா சுரூபத்தையும், பி.டபிள்யூ.டி (PWD) கண்காணிப் பாளர்கள் கண்டு. அதை பக்தியோடு பேணிப் பாதுகாத்து வந்தனர்.

(அன்ரனைனஸ் : 1956-1979 – 7) தற்போது அந்த நற்கருணை கிராதியோடு இணைந்ததாக லூர்த்து கெபி ஒன்றை 1949ல் அருட்தந்தை ஜெ. சிங்கராயர் அடிகளார் அப்போதைய ஆயர் கியோமர் ஆண்ட கையின் வழிநடத்தலில் கட்டியெழுப்பியுள்ளார். இக் கெபியானது 30 வருட போராட்ட காலங்களில் காப்பாற்றப்பட்டு இன்றுவரை நம் முன்னோரின் விசுவாசத்தை வெளிக்காட்டும் தொன்மைச் சின்னமாக காட்சியளிக்கிறது.

மாந்தையில் இருந்த மாதா சுரூபத்தை சில பிரான்சிஸ்கன் சபைக் குருக்களும், மாந்தை மக்களும், முதல் தடவையாக இடம் பெயர்ந்து மடுவிற்கு எடுத்துச் சென்றுள்ளனர். எனும் பல்டேயுஸ் பாதியாரின் குறிப்பை ஆதாரங்காட்டி 1894ல் ஜே.பி லிவின்ஸ் என்பவர் தனது “மனுவல் ஒவ் வன்னி” எனும் நூலில் 254ம் பக்கத்தில் கூறியுள்ளார். இக்கருத்தையும் “மாந்தை மாதாவே மடுமாதா” எனும் மாதோட்ட மக்களின் ஏகோபித்த தொனிக்குரலையும் ஆதாரமாகக் கொண்டு மன்னார்த் தீவு கிறிஸ்தவர்கள் மரிப்பதற்கு முன்னரே மடு அன்னை சுரூபம் மாந்தை ஆலயத்தில் இருந்துள்ளது.


16ம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் மன்னாருக்கு வந்தபோது மாந்தை பட்டினமும், திருக்கேதீஸ்வர கோவிலும் பாழடைந்திருந்ததாகவும். 1560 இல் மன்னார் கோட்டையை டி.கொன்ஸ்ரன்டைன், டீ.பிறாங்கன்ஸ் என்பவர்கள் தலைமையில் கட்டுவதற்கு இங்கிருந்து முருகைக்கற்கள் எடுத்துச் செல்லப் பட்டதாகவும் (Chronical page-28). 1658 இல் மாந்தையில் உள்ள ஆரோக்கிய மாதா கோவில் டச்சுக்காரரின் ஆட்சியில் விழுந்ததினால் அங்குள்ள கிறீஸ்தவர்கள், மாதாவின் சுரூபத்தை வன்னிக்கு எடுத்துச் சென்றதாகவும், 1670 இல் மாந்தைக்கோவில் டச்சுக்காரருக்கு கூட்டம் கூடும்



THE NEWLY CONSTRUCTED MOTHER VIRGIN ROSARY VILLAGE

இடமாக மாற்றப்பட்டதாகவும், யாழ் அரசஅதிபர், திரு.எச்.நெவில் (Mr.H.Nevill) தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார், அத்துடன் 1670 இல் டச்சுக்காரர் பதித்த நிலக்கல்லை தான் கண்டெடுத்ததாக கூறியுள்ளார். (Codex Madhu 1888, Cronicle Madhu , அத்தியாயம் 3 பக்-26) 1669ம் ஆண்டு காலப் பகுதியில் இலங்கைத்தீவை ஒல்லாந்தர் கைப்பற்றிய போது, மன்னார் தீவில் வாழ்ந்த கிறீஸ்த்தவர்களுக்கு எதிராக ஒரு கொடூரமான வேத கலாபனை ஆரம்பமாகியது.

# மருதமடு அன்னையின் திருச்சுரூப வரலாறு



வண.பிதா.மெய்சட் OMI [Rev.Fr.Massiet-OMI] என்பவர் மடுத்தேவாலய சரித்திரப் புத்தகத்தில் (Codex-histrocious. 1886) இல் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். "1670 இல் மாந்தையில்" ஆரோக்கிய அன்னை எனும் பேரில் ஓர் கோவில் இருந்ததாகவும் அதை வண.பிதா.பெற்ரோ டீ பெற்றாங்கோ 1614 இல் கட்டியதாகவும் குறிப்பிட்டுள்ளார். (Our lady of Good Health built by. Rev.Fr.Pedro de Betanco. Chronicle Chapter, II page 20 th second para) பல இந்தியக் குருக்கள் வள்ளம் மூலம் நாட்டைவிட்டு வெளியேறியமையினால், மன்னார், மாந்தை, ஆகிய இடங்களில் வாழ்ந்த கிறீஸ்தவர்கள். வேதத்தில் தளைத்திருந்த அக்காலத்து சங்கீத்தான், உபதேசியர், போன்றவர்கள் தலைமையில் இரவில் மறைவாக சிறு சிறு குழுக்களாக ஒன்று கூடி மெழுகுவர்த்தி உதவியோடு வேதத்தைப் பரப்பினர். இவர்கள் வேதகலாபனையிலிருந்து கிறீஸ்தவ மதத்தையும், மக்களையும், காப்பாற்றிக் கொள்ள செபமாலையை ஓர் ஆயுதமாக எடுத்துக்கொண்டனர்.

1670ல் மாந்தை சிற்றாலயத்தைச் சேர்ந்த பக்தியுள்ள 20 குடும்பங்கள் ஒன்றுகூடி, மாந்தையில் வீற்றிருந்த செபமாலைமாதா சுரூபத்தை பாதுகாக்கும் முகமாக ஆலோசனை செய்துள்ளனர். [Chronical Madhu -28] இதன் பயனாக இவ் 20 குடும்ப அங்கத்தவர்கள் மாந்தையில் நிலைகொண்டிருந்த செபமாலைமாதா சுரூபத்தை ஒல்லாந்தரிடமிருந்து பாதுகாக்கும் பொருட்டு, அதனை எடுத்துக்கொண்டு கால் நடையாக முதலில் கள்ளியட்டைக்காட்டில் சிறிது காலமும் அக்காலத்தில் கண்டி இராட்ச்சியத் திற்குட்பட்ட யானை, புலி, உள்ள அடர்ந்த காட்டினுடாக இராமேஸ்வரத்தில் இருந்து கண்டிக்குச் செல்லும் முன்னைய இராஜ பாதை, (தற்போதைய A14 பாதை) மூலமாக கண்டி அரசனின் சுங்கச் சாவடியென்னும் புராதான குளத்திற்கு அருகேயுள்ள கிராமமொன்றிற்கு (தற்போதைய தட்சணாமருதமடு கிராமம்) தமது நீண்ட பயணத்தை செப மாலைமாதா சுரூபத்துடன் சென்றடைந்தனர். அதன்பின் 2 கி.மீ துாரத்திலுள்ள மருத மரங்க ளினால் சூழப்பட்ட சிறிய குளக்கரையைக் கொண்ட மருத கிராமத்திற்கு சுரூபத்தை எடுத்துச் சென்று வணங்கினர்.

அங்கு மாந்தையின் பரம்பரை கிறீஸ்தவர்கள் முதல்முறையாக திருச்சிலுவையை நட்டு செபமாலைமாதா சுரூபத்தை வைப்பதற்காக ஓலைகளினால் வேயப்பட்ட சிறு கொட்டிலை அமைத்து தமது வேதவைராக்கிய வித்தை விதைத்ததாக அறியப்படுகின்றது. (ஞானப் பிரகாசியார் 225 மடு-272-276) அக்காலப் பகுதியில் யாழ்ப்பாணப் பட்டணத்தில் வேதகலாபனை காட்டுத்தீ போல் நாலா பக்கமும் பரவிக் கொண்டிருக்க, யாழ்ப்பாண குடாநாட்டிலிருந்து வேதத்தில் வைராக்கியம் நிறைந்த கிறீஸ்தவ மக்கள் இடம்பெயர்ந்து சுமார் 700 கிறீஸ்த்தவர்கள் பூநகரி கடல் ஏரியைக் கடந்து வன்னிக் காட்டில் நுழைந்து புதுமையான விதத்தில், செபமாலை மாதாவின் சிறுகுடிலை நோக்கி தேவனால் அழைத்து வரப்பட்டனர்.

யாழில் இருந்த ஏழு இந்தியக் குருக்களும், 700 கிறீஸ்த்தவர்களும், பூநகரி கடல் ஏரியைக் கடந்து, காட்டு வழியாக நடந்து மன்னாரிலுள்ள, மடுத்தேவாலயத்தை வந்து சேர்ந்ததாக சான்றுகள் உள்ளன. [Codex Madhu 1968 இல்) கானகத்தின் நடுவே அமைதியும், சமாதானமும் நிறைந்த மருதமடு செபமாலை மாதாவின் பாதகமலங்களில் மாந்தை கிறீஸ்தவர்கள் அமைதியாக ஒவ்வொரு இரவும் செபமாலையை கரங்களில் ஏந்தி தம்மைக் காப்பாற்றுமாறு மாதாவை வேண்டினர்.


இவர்கள் மத்தியில் ஓர் போர்த்துக்கேய தளபதியின் மகளான லேனா என்பவளும் வந்திருந்தாள், இவள் கிறீஸ்துவின் மேல் அலாதியான பக்தியும், ஏனையோருக்கு முன்மாதிரியுமான சீவியத்தையும் வாழ்ந்து வந்தவள். யாழ் கிறீஸ்தவர்கள் இவளை "சந்தலேனா" அல்லது, "அர்ச்சேஸ்டலேனா" என அழைத்து வந்தனர். யாழ் கிறீஸ்தவர்களும், மாந்தை கிறீஸ்தவர்களும், கானகத்தின் நடுவே தேவனின் அருளினால் ஒன்று சேர்க்கப்பட்டதை நாம் வாழ்நாளில் கண்ட பரவசம் என அக்கால கிறீஸ்த்தவர்கள் அறிவித்தார்கள். [Chronical chapter-31-32]

காலகதியில் லேனா எனப்படும் அப்பெண் மடுவில் இருந்த சுங்க அதிகாரியை மணம் புரிந்ததால். இவள் மாதாவின் பெயரால் தமது செல்வாக்கை பாவித்து மருதமடு மாதாவிற்கு சிறு கோவிலைக் கட்டுவித்தாள். வங்காலையைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர் அந்தோனியோ டீ மெலோ [Andonio de Mello] மடுக்கோயில் சம்பந்தமான வழக்கில் (வழக்கு இல.6871 ) – 1875 இல் சாட்சியம் பகர்கையில் லேனா என்பவள் மடுக் கோவிலைக் கட்டியதாக இவர் சாட்சியம் கூறியுள்ளார். [The Cronicle of Madhu chapter IV page 32 - first para] இச்செயலுக்காக அக்காலத்து கிறீஸ்தவர்கள் அவ்விடத்தை "சீலேனா மருதமடு" என்று அழைக்கலாயினர். அது இந்நாள் வரைக்கும் இப்புனித பூமிக்கு ஒரு பெயராக விளங்கி வருகின்றது.

கானகத்தில் அமைந்துள்ள மருதமடு அன்னையின் வருகையை தொடர்ந்து அதன் சுற்று வட்டத்தில் விச சர்ப்பங்களின் தீண்டுதல்கள் வெகுவாக குறைவடைந்தன. காலப்போக்கில் மடு மாதாவின் தலத்து மண்ணை மக்கள் நம்பிக்கை யுடன் எடுத்துச் சென்று தமது தீராத நோய்களை தீர்த்ததாக சரித்திரம் சொல்கின்றது. இச்செயல் இன்றுவரை நிலைத்து நிற்கின்றது. வண பிதா றோமமிஸ் கிர்ச்சென் [Rev.Fr.Rommess Kirchen] 1931 இல் எழுதிய புத்தகத்தில் கோவாவைச் சேர்ந்த ஓர் பரிசுத்த சுவாமி மடுக்கோவில் வளவில் புதைக்கப்பட்டதாகவும், அவரை கிறீஸ்த்தவர்கள் "சம்மனசு சுவாமி" என அழைத்ததாகவும் கூறப்படுகிறது. அவரின் பரிசுத்தமான வாழ்க்கையினால் அவர் வாழும்பொழுதே மக்கள் அவரை புனிதர் என அழைத்தனர். இவரை புதைத்த இடத்தின் மண்ணை பக்தர்கள் எடுத்துச் சென்று தமது குரோத வியாதிகளுக்கு மருந்தாக பாவித்தார்கள். 1697–1721 காலத்தில் வணபிதா பெற்றோ பிராடோ [Rev.Fr.Bedro Frerdo] முதல் முறையாக இம்மண்ணை ஆசீர்வதித்ததாக ஏடுகளில் [Cronical Madhu Page- 36] குறிப்பிடப் பட்டுள்ளது.



# நல்லூர் கந்தசுவாமி கோயில் வரலாற்றுச் சிறப்புக்கள்



"கருதிய செல்வமுங் கல்வியுந் தந்தெமைக் காப்பவனே
கருவினை தீர்த்துன் கரிபெறும் ஆனந்தக் காட்சிதரக்
கருமயி லேறி வனிதைய ரோடுவேல் கைப்பிடித்துக்
கருணை கொண் டெம்முன் வருபவ னே நல்லைக்
கந்தப்பனே"

இப்பூவுலகின் தமிழ்க் கடவுளான பன்னிருகை வேலப்பன் பக்தர்கள் உய்யும் வண்ணம் குன்று தோறாடிச் செந்தமிழ்ச் சோலையில் உலா வந்து ஏழிசையும் வாழ அருளியதால் கந்தப்பெருமான் உறைந்த எமது யாழ் மண் தேவலோக மாகவே காட்சி தருகிறது.

தென்னிந்தியத் தமிழகத்தில் நீர்வளம், நிலவளம் சிறந்ததால் பல திருவூர்கள் நல்லூர் (நல்ல ஊர்) புத்தூர் (பலபுதுமைகள் கொண்டதால்) திருநெல் வேலி ஊரெல்லையில் மிதமிஞ்சிய திருவாகிய நெல்லினை எல்லை வேலியாக அமைத்ததால்) போன்ற பல சிறப்புடன் திகழ்கின்றன. இத் திருவூர்களில் ஆலயங்கள் பொலிந்து அருள்பாலிக்கின்றன. ஆன்மீக நெறியுடன், கல்வியும் சிறப்படைகின்றன. திருவும் கல்வியும் பொலிவதால் இறையருட்பேறு வலம் வரும் நல்ல ஊர்களாக ஏற்றிப் போற்றப் படுகின்றன.

**மண்ணின் பெருமை**

இச்சிறப்புக்களுக்கும் மேலாக எமது யாழ் மண்ணில் குமரப்பெருமான் குடிகொண்ட பெருநிலப் பரப்பெங்கும் சைவமும், தமிழும், இசைமரபும், மக்களின் அயராத சரீர உழைப்பால் விவசாயமும், தொழில் வகைகளும் தந்த நற்பலனாக நிதி வளமும், மெய்ஞ் ஞானத்தைப்" புகட்டும் ஆன்மீக வளர்ச்சியும், அறப்பணிகளும் பொலிந்துள்ளதால் புனித பூமியாகவே காட்சி தருகின்றது. எமது நல்லைக்குமரன் எழுந்தருளியிருக்கும் சுற்றுச்சூழல் யாவும் அன்றிலிருந்து இன்று வரை ஓங்கு புகழுடன் பிரகாசிப்பதை யாவரும் அறிவோம்.

இம்மண்ணின் பெருமை இன்று நேற்று ஆரம்பிக்கவில்லை. சோதிடக்கலைமற்றும் இன்றை விஞ்ஞானக் கலையில் நிலத்தடி நீர் மற்றும் கனி வளங்களையும் கண்டறிவது போல் எம்மண்ணின் பல வளங்களும் பொலிந்த தெய்வீக ஒளி வெள்ளம் பாய்வதை அன்றைய தமிழ் மன்னர்கள் உணர்ந்தனர். பல நூற்றாண்டுகளுக்கு முன் இம் மண்ணில் காலடி வைத்த தமிழ் மன்னர்கள் கதிரமலை (கந்தரோடை) சிங்கைநகர்(வல்லிபுரம்) போன்ற இடங்களில் நிலை கொண்டு தமது இராசதானிகளை நிறுவினர். சில வருடங்களின் பின் நல்லூர் திருவூரின் இயற்கையும் திருவருளும் கவர்ந்ததால் யாழ்நல்லூரில் தமது இராச்சியத்தை அமைத்துத் தமது அரச பணிக்கு அணி சேர்த்தனர்.

**முதல்முதல் கட்டுவிக்கப்பெற்ற நல்லூர் கந்தசாமி கோயில்**

புவனேகபாகு நல்லூர் கந்தசாமி கோயிலைக் கட்டுவித்தான் என்பதை கைலாயமாலை எனும் நூலில் பின்வருமாறு கூறப்படுகின்றது.

"இலக்கிய சகாத்தமெண்ணூற் றெழுபதா மாண்ட
தெல்லை
அலர்பொலி மாலைமார்ப னாம்புவ னேகபாகு
நலமிகும் யாழ்ப்பாணத்து நகரிகட் டுவித்து நல்லைக்
குலவிய கந்தவேட்குக் கோயிலொன்
றமைப்பித்தானே"

புவனேகபாகு முதல் குருக்கள் வளவு எனுமிடத்தில் நல்லூர் கந்தசாமி கோயிலை கட்டிய ஆண்டை அவர்கள் பின்வரும் பாடலில் பாடினார்.

'இலக்கிய சகாத்தமெண்ணூற் றெழுபத்தி நான்கின
லர் திரிசங்க போதியாம் புவனேக பாகு நலமுறும்
யாழ்ப்பாணத்து நக கட்டுவித்து குலவிய கந்தனார்க்குக்
கோயிலொன் றமைப்பித்தானே"

**புவனேகபாகுவின் தமிழ் ஆற்றல்**

புவனேகபாகு அரசர்களுக் குரிய வீரம் ஏனைய தகைமைகளைக் கொண்டதுடன் திராவிட இனத்தைச் சேர்ந்த காரணமாக தமிழில் நல்ல பாண்டித்தியமும், கவிபாடும் புலமையும், ஆன்மீக பக்தியும் உடையவன். யாழ்ப்பாணத்தில் அரசாண்ட காலத்தில் இவன் தனது ஆளுமைக்குட்பட்ட ஆலயங்கள், தீர்த்தங்களை தரிசிப்பதற்குத் தவறுவதில்லை. ஒரு சமயம் தமது பிரதானிகளுடன் கீரிமலை கண்டகி தீர்த்தத்தில் நீராடியதும் அருகே உள்ள நகுலேஸ்வரர் ஆலயத்திலும் வழிபட்டான். பின் மதிய நேரம் மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்குச் சென்றான். அச்சமயம் அவ்வாலய பிரதம சிவாச்சாரியாராகப் பணி புரிந்துள்ள சின்ன மனத்துள்ளார் என்னும் வேதியர் புவனேகபாகுவையும், பிரதானிகளையும் வரவேற்று விருந்துபசாரமும் செய்தார். மதிய உணவாக இருந்ததால் சோற்றுடன் பல விதமான கறிவகைகளையும் படைத்தார். யாவற்றையும் விருப்புடன் ருசித்துண்ட புவனேகபாகு தமக்கிட்ட உணவின் சிறப்பை பாடல் மூலம் பாடி மகிழ்வித்தார். யாழ்ப்பாண வைபவ மாலையில் பிரசுரிக்கப்பட்ட பாடல் இதுவாகும்.

"சின்ன மனத்தான் செயும் விருந்திற் சாற்றுசி
அன்னதனை விண்ணோர் அறிந்திருந்தால் -
முன்னலைவாய் வேற்பதனைட் காவியுயிர்த்து
வேலைக் கடையிந் தேயுலைதல் அற்பமென
தள்ளுவரே யாம் "

சிங்கையிலிருந்து நல்லூரை இராதானியாக்கிய மன்னர்கள் தமது பெயருடன் சிங்கை என்னும் பெயரையும் சேர்த்து செகராசசேகரன், பரராச சேகரன் என்னும் பட்டப் பெயர்களுடன் ஆண்டு வந்தனர்.

**செகராசசேகரன்**

1380ல் செயவீரசிங்கை ஆரியன் என்பவன் செகராசசேகரன் (5வது) என்னும் பட்டப் பெயருடன் அரசாண்டான். இவன் அரசர்களுக்குரிய பல ஆற்றல்களுடன் சோதிடம், மருத்துவம் ஆகிய துறைகளிலும் திறமை மிகுந்தவனாகக் காணப்பட்டான். பொது மக்களின் நன்மை கருதி செகராசசேகரம் என்னும் வைத்திய நூலையும், செகராசசேகரமாலை என்னும் சோதிட நூலையும், காரிவையாவின் கணக்கதிகாரம் என்னும் நூலையும் இயற்றுவித்தான். இவனின் காலத்திலேயே தட்சணா கையலாயபுராணம் எனும் நூலும் தோற்றுவிக்கப்பட்டது. இவன் தனது ஆன்மீக உந்தலுடன் நடுவு நிலை தவறாது செங்கோலோச்சினான். இதனால் குடிமக்களுக்கிடையே இவனின் பெயர் நிலை நின்ற தெனலாம்.

1414ல் செயவீரனின் தம்பி பரராசகேரன் என்னும் பட்டப்பெயருடன் அரசாண்டான். இவனுக்குப் பின் கனக சூரிய சிங்கை ஆரியன் ஆட்சியிலிருந்தான். அக்காலத்தில் கோட்டை (ஜெய வர்த்தனபுரம்)யை ஆண்ட ஆறாம் பராக்கிரமபாகு தனது வளர்ப்பு மகனான செண்பகப் பெருமாளையும், படைவீரர்களையும் யாழ்ப்பாணத்திற்குச் சென்று போரில் வென்று வர அனுப்பினான்.

**செண்பகப்பெருமாள்**

முதலியார் செ.இராசநாயகம் அவர்களின் கூற்றையும் நோக்குவோம் ஆறாம் பராக்கிரமபாகு கோட்டையில் அரசாண்டபோது மலையாளத்தைச் சேர்ந்த பணிக்கன் ஒருவன் வந்து தனது வாட்போரின் திறமையைக் காண்பித்தான். அதனால் வியப்படைந்த மன்னன் தமது படையில் இவனுக்கு இடம் தர எண்ணி தமது குலப் பெண்ணுடன் திருமணத்தில் இணைத்தான். இவனுக்குச் செண்பகப்பெருமாள் (சப்புமல் குமாரய) ஜெயவீரன், அம்புலகுலகுமாரய என்னும் இரு புதல்வர்கள் பிறந்தனர். தனக்கென ஆண்வாரிசு இல்லாத காரணத்தால் பராக்கிரமபாகு இருபிள்ளைகளையும் தத்தெடுத்து வளர்த்தான். நாட்கள் சென்றன. இரு புதல்வர்களும் சிறந்து விளங்கினர்.இதே சமயம் பராக்கிரமபாகுவின் மகளுக்கென ஒரு புதல்வனும் வளர்ந்து வருகிறான். பராக்கிரமபாகு தனது பேரனை அரசனாக்கும் சிந்தனையில் வளர்ப்பு மக்கள் இருவரையும் அகற்ற எண்ணினான் . அதன் பேறாகப் பராக்கிரமபாகு செண்பகப்பெருமாளை தம்பியார் மற்றும் பெரும் படையுடன் யாழ்ப்பா ணம் சென்று யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றுமாறு அனுப்பினான். செண்பகப் பெருமாளுக்குப் போராற்றலும், திறமையான படை பலமும் உதவிட யாழ்ப்பாண நல்லூர் நகரினுள் புகுந்து யாவற்றையும் இடித்தழித்த வண்ணம் முன்னேறினான். இதையறிந்த கனகசூரிய சிங்கையாரிய மன்னன் தனது குடும்பத்துடன் இந்தியாவிற்குத் தப்பியோடினான். செண்பகப்பெருமாள் தனித்து நின்ற அதிகாரிகளை சிறைப்பிடித்துக் கொண்டு போய் கோட்டை மன்னனிடம் ஒப்படைத்தான். இதனால் செண்பகப் பெருமாளை யாவரும் வரவேற்றுப் பெருமைப்படுத்தினர்.

பராக்கிரமபாகு தனது பேரனையே அரசனாக்க எண்ணி கபட நோக்குடன் செண்பகப்பெருமாளை யாழ்ப்பாணத்தில் அரசு புரியுமாறு அனுப்பி வைத்தான்.1450ல் நல்லூரை வந்தடைந்த செண்பகப் பெருமாள் முதலில் தமது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நல்லைநகரைக் கட்டியெழுப்பினான். தமது ஆன்மீக உணர்வு மேலிட தமது அரசின் மையப்பகுதியைத் தேர்ந்தெடுத்து மாட மாளிகை அமைத்து ஸ்ரீசங்கபோதி புவனேகபாகு என்னும் சிங்களப் பட்டப் பெயருடன் 17 வருடம் அரசாண்டான். இக்காலத்தில் நல்லை நகரில் தனது ஆன்மீக சிந்தனைக்க மைய முருகன் ஆலயம் ஒன்றை நிறுவினான்.

**இரண்டாவதாகக் கட்டப்பட்ட நல்லூர் கந்தசாமி கோயிலின் அமைவிடம்**

நல்லூர்முத்திரைச் சந்தைச் சந்தியில் இருந்து கிழக்கே செம்மணிக்குச் செல்லும் வீதியின் அண்மையில் வடக்குப் பக்த்தில் கிறிஸ்தவ தேவாலயம் இருக்கும் இடமே செண்பகப் பெருமாளால் கந்தசாமி கோயில் கட்டப்பட்ட இடமாகும். ஆலய மண்டபங்கள் உள்வீதி, வெளிவீதியுலாவிற்கான வீதிகள் திருமஞ்சனக் கிணறு மற்றும் பரிவாரத் தெய்வங்களின் சந்நிதிகள் யாவும் அமைந்திருந்தன.

அந்நியர் படையெடுப்புடன் கந்தசாமி கோயில் இடிக்கப்பட்டு கிறிஸ்தவ தேவாலயம் கட்டப்பட்ட போதும் திருமஞ்சனக் கிணறு சேதமாகாமல் இருந்தது. இவ்வாலயத்தின் கீழ் திசை யில் பிற் காலத்தில் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை புதிதாக அமைத்து வகுப்புக் கள் நடைபெற்றன. பிற்காலத்தில் (ஏறத்தாழ 25ருடங்களில்) ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மூடப்பெற்றதும் அவ்விடத்தில் யாழ்வலயக்கல்விப் பணிமனை தொடங்கிச் செயற்படுகிறது.

கலாபூஷணம் மூ.சிவலிங்கம்

# நல்லூர் ...

அண்மையில் (2013-2014) இக்கல்வி வலயத் தேவைக்கென மாடிக்கட்டடம் கட்டுவதன் பேரில் கிணறு மூடப்பட்டது. அச்சமயம் புராதன ஆலயத்தின் திருப்பலிபீடம் ஒன்றும் வேறு சில கற்க ளும் காணப்பெற்றன. அவற்றைக் கல்வி வலயப் பணியாளர்கள் எடுத்துச் சென்றனர். இவ்வாறு பல சிதைந்த பொருட்கள் பல அதன் உபயோகம் ஏதும் அறியாமற் போயின. இதுபற்றி ஆய்வு செய்யும் பணியை உரியவர்கள் கவனிப்பர் 1467இல் கோட்டை மன்னன் பராக்கிரமபாகு தமது முதுமையை நாடித் தமது பேரனுக்கு முடிசூட்டி இராச்சியத்தையும் ஒப்படைத்தான். சில காலத்தின் பின் பராக்கிரமபாகு மரணித்தான். இச் சம்பவங்களை அறிந்த செண்பகப் பெருமாள் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டுக் கோட்டையை அடைந்து சிறுவனான அரசனைக் கொன்று ஆறாம் புவனேகபாகு என்னும் பெயருடன் தானே இராச்சியத்தையும் பொறுப்பேற் றான். செண்பகப்பெருமாள் தனது யாழ்ப்பாண இராச்சியத்தை ஆளவென விஜயபாகு என்னும் சிங்கள அரசனை நியமித்தான்.

**கனகசூரியன் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரல் (1467-1478)**

செண்பகப்பெருமாள் யாழ்ப்பாணத்திலிருந்து விலகிச் சென்றதை அறிந்த கனகசூரியன் தனது புதல்வரையும் அழைத்து வந்தான். அங்கு அரசு புரிந்த விஜயபாகுவைக் கொன்று தானே அரசாட்சியை மேற்கொண்டான். கனகசூரியன் நல்லூரைச் சிறப்பிக்க எண்ணித் தமது இராச்சிய எல்லைச் சுவர்க்ளையும், அரண்களையும், அரண்மனைகளை யும் கட்டி அழகு செய்தான். மேலும் யானை மற்றும் குதிரைப் படைக ளுக்கான லயங்களையும் புதிய காப்பகங்களையும் நிறுவினான். அரச வீதிகளையும், எழில் மிகு பூஞ் சோலைகளையும் அமைத்தான்.

குடிமக்களின் நன்மை கருதி நூல் நூற்று ஆடைகள் தயாரிக்கும் ஆலைகள், ஆடைகளுக்குச் சாயமூட்டுவோர், துணி நெசவாளர்கள், தச்சுவேலை, கன்னாரவேலை, நகைவேலை, ஓவியர், சோதிடர், வைத்தியர் போன்ற தொழிலாளர்களை அவ்வத் தொழில் சார்ந்தவாறு வெவ்வேறிடங்களில் குடியேற்றினான்.

**குடியேற்றப்பட்ட குடிமக்களின் பரம்பல்**

ஒவ்வொரு பணி செய்வோரும் வாழும் பகுதிகளில் அவர்களின் பாவனைக்காகக் குளங்களும் அவ்வவ் வீதிகளையும் தோற்றுவித்தான். கைலாச நாதர் ஆலய வடபுறச் சூழல் கொண்ட தற்போது கோயில் வீதி என அழைக்கப்படும் வீதியருகில் பிராமணர் களைக் குடியேற்றினான். இவர்களின் வசதிக்காக வெட்டப்பட்ட குளம் இன்றும் பிராமணக்கட்டுக் குளம் என அழைக்கப்படுகின்றது. அன்று குடியேறிய பிராமணர் பலர் அந்நியராட்சியில் வெளியேறினாலும் ஒரு சில குடிகளாவது இன்றுவரை வசிக்கின்றனர். இவர்களிற் பலர் வெளியேறவும் வேறு சிலர் (முஸ்லிம்கள்) குடி வந்த தாலும் இச்சூழல் குருக்கள் வளவு என்றே அழைக்கப்பட்டது. இசையாளர்கள் (பாணர்) வாழ்ந்த இடத்தில் இன்று (கச்சேரி நல்லூர் வீதியில்) பாணன் குளமும், பண்டாரங்கள் வாழ்ந்த இடத்தில் பண்டாரக்குளமும், நாயன்மார்கள் வாழ்ந்த வெயிலுகந்தப் பிள்ளையார் கோயிலின் தென்பால் நாயன்மார் கட்டுக் குளமும் இன்றுவரை அப்பெயருடன் சான்றாக அமைந்துள் ளன.

அக்காலத்தில் வழங்கிய வீதிகளான செட்டித்தெரு, கன்னார வீதி, பண்டாரக்குளம்வீதி, செங்குந்தா வீதி போன்றவை இன்றும் அதே பெயரில் அழைக்கப்படுகின்றன. ஆலயங்களின் பூசைப் பணிக் காக வேதியர், பூ வேலைக்காரரை வெவ் வேறாகக் குடியேற்றினான். விவசாயச் சிறப்புக் காக ஆங்காங்கே பல குளங்களை வெட்டுவித்து அச்சூழலில் விவசாயிக ளைக் குடியேற்றினான். இவ்வாறு பற்பல தொழிலாளர் களையும் அவரவர் உறவு முறைக்கமைய வெவ்வேறாகக் குடியமர்த்தியதுடன் அவர்கள் வாழ்ந்த பகதியின் வீதிகளுக்கு அம்மக்களின் குலப்பெயர்களைச் சூட்டினான். விவசாயமும்,கைத்தொழிலும் இதர சேவைகளும் வசதியாகக் கிடைத்தன. ஆலயங்கள் சிறப்படைந்தன. விவசாயம் செழித்தது. குடிமக்களும் சிறப்புடன் வாழ்ந்தனர். அரசனும் நடுநிலைமை மேலோங்க அரச பணியாற்றினான். தெய்வீக அலையும் வீசியது.

எமது நாட்டு முன்னேற்றத்தில் மிகத் தடையாக அமைவது நாட்டு அரசியல் கட்சிகளின் பதவி மோகங்களும், அதனை அடைவதற்கான குறுக்குவழி வேலைநிறுத்தச் செயல்களுமே மக்களின் அமைதி வாழ்வை களாகவும், பாமர மக்களின் வாழ்வியல் பொருளாதா ரத்தில் ஏற்படும் தாக்கம், மாணவரின் கல்வி நிலைப் பாதிப்பு எனப் பல்வேறு தரப்பினரையும் சீரழிக்க வைக்கிறது. பொறுப்பு வாய்ந்த, அறிவு சார்ந்த எவரும் மக்களின் நிலைபற்றி அக்கறை கொள்ளாது சுயநலப்




சீரழிப்பதை யாரும் கவனத்தில் கொள்வதில்லை. கட்டுப்படுத்த முன் வருவதுமில்லை என்பதற்கு எமது நாட்டில் இடம்பெற்றுவரும் வேலை நிறுத்தங்களே முக்கிய காரணங்களாகும்.

இதனால் எமது நாட்டில் நல்லெண்ணப் பின்னடைவு போக்கில் மக்களின் வரிப் பணத்திலேயே கற்று மக்களின் வாழ்வையே சீரழித்து சுரண்டி வாழ்வதற்கான முயற்சிகளின் வெளிப்பாடுகளே அண்மைக்காலமாக நடைபெற்றுவரும் வேலை நிறுத்தங்களாகும். அதன் பங்காளராக மாறும் வைத்தியர்கள், புகையிரத ஊழியர்கள், சாரதிகள், போக்குவரத்து ஊழியர்வேலைநிறுத்தங்கள், ஆசிரியர் வேலைநிறுத்தங்கள், தபால் ஊழியர் வேலை நிறுத்தங்கள் போன்றவை எமது வழிகாட்டிகளாக மதிக்கப்படுவர்கள் சுயநலத்தில் தவறான அரசியல் வழி காட்டலால் அர்த்தமிழந்த வேலைநிறுத்தங்கள் மக்கள் படும் இன்னல்களை உணராததாலும் எய்தவன் ஏதோ அரசியல் செய்ய மக்கள் மீது பாயும் அம்புகளாக போராட்டங்கள் மாறி வருவது கவலையளிக்கின்றது.

இறைவனின் பிரதிநிதியாகப் போற்ற பட வேண்டிய மருத்துவர்கள், ஆசிரியர்கள், போக்குவரத்து சாரதி களை நம்பி உயிரைப் பாதுகாத்துக் கொள்ள நல்வழிப் படுத்த வேண்டிய முன்மாதிரியானவர்களே தமது சுயநலத்திற்காக சம்பள உயர்வை சாட்டாக வைத்து போராட்டம் என்ற போர்வையில் அரசியல் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் எனத் திட்டமிடுவோரின் கைப்பொம்மைகளாக மாறிச் செயற்படுபவர்கள் ஒரு லட்சத்திற்கும் மேல். பல வழிகளில் ஊதியம், சலுகைகளைப் பெற்று வருவோரின் கோரிக்கைகள் விசித்திரமானதாக, மக்கள் நலனில் அக்கறை இல்லாததாக ஒரே ஆண்டில் பல முறை வேலை நிறுத்தங்களில் ஈடுபடுவதுடன் தாம் வேலை பார்க்கும் இடங்களையே பல அழிவுகள், சேதங்களை ஏற்படுத் துவதோடு மாணவர்கள், முதியோர், நோயாளர்கள் என்று பாராமல் துன்புறுத்தப்படுவதுடன் பல கோடிப் பணங்கள் சேதத்தை விளைவித்து அதற்கான தண்டனைகளைப் பெறாது வேலைநிறுத்தக் காலத்திலும் வேலை நிறுத்தக் காலத்திற்கான வேதனத்தையும், சலுகையையும் பெற்று மீண்டும் இணைந்து கொள்வது மக்களின் வரிப்பணம் சிதறடிக்கப்பட்டு சீரழிக்கப்படுவது எமது நாட்டில் சாதாரண நிகழ்வாகி விட்டது.

இவர்களின் போராட்டங்களாக அர்த்தமற்ற கோரிக்கை கள் முன்வைக்கப்படும். உதாரணமாக, சிங்கப்பூர்-இலங்கை ஒப்பந்தத்திற்காகவும் வரியற்ற வாகனப் பொமிற்றுகளுக்காகவும் உயர் பாடசாலைகளில் தம் பிள்ளைகளைச் சேர்ப்பதற்காகவும், சம்பள உயர்வு, மேலதிக கொடுப்பனவுகளுக்காகவும் இரக்கமற்ற கோரிக்கைகளைக் கேட்பவர்கள் முழுநேர பணியாள ராக வேலை செய்வதை விட வெளி வைத்தியசாலை களில் மட்டும் அதிக அக்கறைப்பட்டு, பணத்தாசையுடன் பாமர மக்களின் வரிப்பணத்தைச் சூறையாடும் மனித மாண்பற்ற ஒரு சில வைத்தியர்களின் செயல்கள் வைத்தியத்தின் புனிதத்தை சீரழிக்கின்றது.

பரீட்சைக் காலத்தில் மாணவர்களின் உளநலத்தைப் பாதிக்கும் செயலாக ஆசிரியர்களின் போராட்டமும், தபால் போக்குவரத்து ஊழியர்களின் போராட்டமும் அவலை நினைத்து உரலை இடிக்கும் அரசியல் மாற்றத்திற்கான கோழைத்தனமான செயல்களுக்கு துணை போகிறவராக போராட்டங்களை ஏற்படுத்துவது கூட்டு அரசியல் கட்சிகளின் கைப்பொம்மகளாகி மக்கள் வாழ்க்கையை சீரழிக்கிறது.

தவறுகளை உணர மறுக்கும் இப்பதவியின் புனிதம் சிதைக்கும் ஈனச்செயல் என்பதனை உணராத நிலையால் எதிர்கால சந்ததிக்கே சாபக்கேடு விளைவிக்கும் செயலல்லவா?

உண்மையான கோரிக்கைகளை அமைதியான அகிம்சை வழியில் மக்கள் மனித மாண்பை வெளிப்படுத்தும் செயல்களால் மக்கள் பங்களிப்பைப் பெற்று நாட்டைக் குழப்பும் கூட்டுச் சதிகளில் சிக்காது மக்கள் மனங்களை வென்று மனிதாபிமானம் மலர மக்களுக்காக உங்கள் போராட்டத்தை திசை திருப்புங்கள், மக்களோடு கைகோர்த்து வெல்லுங்கள்!

## வாசகர் கடிதம்

## குருவின் ஆசிகள்

புதிதாய் புலரும் யாழ்களரி கண்டு மகிழ்ந்தேன். புதிய சிந்தனைகளுடன் புதிய படைப்பாளிகளின் ஆக்கங்க ளும் இணைத்து ஊக்கப்படுத்த முன்வந்தமை பாராட்டுக்கள். மக்கள் உண்மை நிலைகளை அறிய வும், மக்கள் நிலைகளை வெளிப்படுத்தவும் புதிய வரவாய் யாழ்களரி வெளிவருவது பாராட்டுக்குரியது. உங்கள் முயற்சிகள் சிறந்து விளங்க இறைஆசிகளும், அருளும் நிறைவாய் பெற எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டி வாழ்த்துகிறேன்.

**சிவஸ்ரீ கு.வை.த.வைத்தீஸ்வரக்குருக்கள்**
**தலைவர், இந்துகுருமார் ஒன்றியம், தெகிவளை.**

# கவி நிலம்

## மாண்புகழ் மாண்டதேனோ

அன்னையவள் பாலருக்கு பால்நிலவில் அமுதூட்டி
பாவாடைகள் கட்டி தாவணிகள் அணிந்தனரே
மெல்ல நடையழகு கண்டு களிப்புடனே
மழலை மொழியில் மகிழ்ந்திருந்த அந்நாளே

தோழிலே சுமப்பதில்லை தள்ளுவண்டி பூட்டியே
சுமையெனவே சேயதனை தள்ளியே செல்கின்றார்கள்
பாசம் பொழிவதற்கு நேரமில்லை என்றே
பாலர் விடுதிகளில் சேர்த்திடுவார் இப்போது.

ஆணென்றும் பெண்ணென்றும் தெரியாத உடையே
பழம் பெரும் நிலைகளெல்லாம் மறந்து போனதே
வெண்துணியல்ல கருந்துணிகள் கண்டு
வெளிநாட்டு வேடம் வேடிக்கையாகியதே

உரல் உலக்கை எங்கேயோ போச்சுதென்று
உழலும் இயந்திரங்கள் உதவியாய் வந்ததுவே
இல்லத்தில் பெண்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம்
ஊர்க்கதைகள் பேசியெல்லோ பொழுதைப் போக்குதுகள்

தாய் தந்தை பேணாது சீமைக்குச் செல்கின்றார்கள்
இங்கிருந்து அனாதையாய் அலைகின்ற முதியோர்
அரவணைக்க யாருமில்லை அண்ணார்ந்து பார்த்து
மூச்சுவிட்டு புன்முறுவல் செய்கின்றார் இங்கே.

பொன் கொள்ளை பெண் கொள்ளை என்னும்
தீண்டாமை செய்வதை தவிர்த்திட வேண்டில்
அரக்கர் கூட்டம் மறைந்திடும் நாட்டிலே
மனிதநேயம் மலர்ந்திடும் உண்மையே

சொந்த மொழியிடையே பிறமொழிகள் பேசுவதும்
சொர்க்கமாம் எம் இனமென்று ஔவையும் புகழ
வீறு நடை போடும் தமிழ் இனமெங்கே
இனிய தமிழ் பேசும் மாண்புகழ் மாண்டதேனோ

போதை வஸ்துக்கள் பொன்னெனக் குவித்து
தகரை நுகர்ந்தே தலை கீழாய் நடக்கின்றார்கள்
கல்வியை வெறுத்து அடிபிடிகள் வாள்வெட்டு
இளையோரின் அறியாமை அழிவைத் தேடுதே

மாற்றம் அடைந்தோம் மறுதலித்தோம் எம் இனத்தை
மரத்துப்போன உள்ளமதாய் வாழ்கின்றோம்
மறந்தே போனதென்ன எம் பண்பாட்டின் முதுகெலும்பை
மாற்றியமைப்பதற்கு வழிவகைகள் தேடுவோம்.

இந்திராணி

# படக்கவிதை 01



### ப(கொ)ள்ளிக்கூ(கு)டம்

பள்ளிக் கூடம்
கூட்டிச் சென்ற என் மகளை
கொள்ளிக்குடம் ஏந்தி
தூக்கிச் செல்கின்றேன்
கலாசார மொட்டை அடித்த
இளசு பழசு காமக்கழுகுகள்
என் பிஞ்சு கொவ்வை கனி
உண்ணும் மழலை கிளி மகளை
காமப் பசிக்கு
பூசித்து விட்டார்கள்
கொள்ளிக் குட நீர்
வழிந் தோடி முடிந்தாலும்
என் வெகுந்த மனக் கண்ணீர் ஊற்று
வாழ் நாள் பூராகவும் ஓடும்
என் பிஞ்சை விழுங்கிய நஞ்சுகள்
சட்ட ஓட்டையால்
தப்பித்து விடுவார்கள்
என் மீது காறித்துப்பும்
சமூக முகமூடிகள் மாத்தி
யோசித்து சீர்திருத்த
ஆயுதம் ஏந்தக் கூடாதா

Sai Bhanu

அள்ளி அணைத்து
ஆறுதல் தந்த தந்தைக்கு
கொள்ளிக்குடம் தூக்கி
கொண்ட கடன் தீர்ந்துவிட
பாவி என்னால் முடியவில்லை
பரிதவிக்கும் எனது மனது
முள்ளி வாய்க்காலில்
கள்ளிச் செடியருகில்
உப்புக்கடல் சாட்சியாக
எல்லாம் முடிந்தது

Seetharaman kalivasan

செத்துப்போன
சடலங்களும்
சம்பிரதாயங்களும்
என்மேல்
சுமத்தப்பட்டிருக்கும் வரை
சத்தியத்தை
இனி நான் காண்பதில்லை

Rajith Geekanth

கொத்துக் கொத்தாய்
கொன்றொழித்த
முள்ளிவாய்க்கால்
உறவுகளுக்கு
கொள்ளிக்குடம்
உடைப்பதெப்போது
அவர்களுக்கு
மரணச்சான்றிதழ்
கிடைப்ப தெப்போது

manimaran manimaran

கொள்ளிக்குடம் தூக்கி
கொள்ளிவைக்க நினைக்கின்றேன்
என் தந்தைக்கு
முடியவில்லை
முள்ளிவாய்க்கால்
இறுதிக் கணதத்தில்
இழந்துவிட்ட கைகளைப்
ஏக்கத்துடன் பார்த்து

Thankarasa Aravinthan

# காளைகள் கடும் வேகமாக வருகிறது விலத்தி நில்லுங்கள்

### சிவகுரு சிவக்குமாருடன் யாழ்களரியின் சந்திப்பு



சில்லாலை தெற்கு பண்டத்தரிப்பில் பூட்டன் காலத்து அடி கொடி எமது சவாரி பரம்பரை வைரவன் வேலன் - வேலன் சிவகுரு - சிவகுரு அற்புதச் செல்வன் - சிவகுரு சிவக்குமார் - எனது வயது (44) தோட்டம், ஆடு, மாடு, வானம், வெள்ளடியன் கோழி, றவிச்சைக்கிள், ரைக்ரர்,டிப்பர், சவாரி மாடு, இதுகள் தான் எங்கள் பிசினசு

விசுவமடு, மட்டுவில், வட்டகச்சி, ஆகிய இடங்களில் நடந்த சவாரியில 1ம் இடம் பெற்றிருந்தோம். தொடர்ச்சியாக 38 சவாரிவரை முதலாவதாக வந்துகொண்டிருந்த நாங்கள் எங்களுடன் மன்னார், விசுவமடு, வற்றாப்பளை, புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி, பரந்தன், அக்கராயன், பூநகரி, சுண்டுக்குழி ஆகிய இடங்களிலிருந்தோம். நூற்றுக் கணக்கான மாடுகள் போட்டிக்கு வரும் அதில 16 சோடி மாடுகள் தான் தெரிவு செய்யப்படும். எமக்கு பரிசு முக்கியமில்லை . சவாரி நடக்கிறதுதான் முக்கியம். எங்கட முன்னோர்கள் விட்டுச் சென்ற விளையாட்டை தொடர்வதில் பெரிய சந்தோசம்.

இவ்வாறு உரையாடிக்கொண்டிருந்த சிவகுரு சிவகுமாரிடம் உங்கள் சவாரிமாடுகளின் தனித்துவத்திற்கு காரணம் என்ன என்று கேட்டபோது மேலும் தொடர்ந்தார்.

கடல்ல குளிப்பாட்டுறநாங்கள் கடல் வாப்பில முட்டறுத்து வேகமாக ஓடும் கடியள் சொறி இல்லாதிருக்கும் முட்டு அற வெந்தயம் கொடுப்பம் நெல்லுமா உமியோட வைச்சுக்கொடுப்பம். இதால உடம்புகள் சீருக்கு வரும். இரவு ஊறவிட்டு விடிய சாப்பாட்டுடன் வெந்தயத்தை வைக்க வேணும்.இதாலதான் முட்டு நுரையடியாது களைக்காது. நெல்லுமா உமியோட அடிச்சுக் குடுத்தா வயிறு குறைஞசு கயிறு மாதிரி இருக்கும் இறுக்கமா பிற்றா நிக்கும்.

வயிறு கூடிய மாட்டுக்கு இளம் சுடுதண்ணி வைச்சு குடல் சுருங்கி கயிறுமாதிரி வயிறு வரும் பச்சத்தண்ணிக்கு வயிறு குளுகுளுக்கும் புது மாடுகள் அடுத்ததாக முட்டற வேணுமெண்டா உளவில பூட்ட வேணும் முக்கி முக்கி இழுத்து முட்டறுந்து வேகம் கூடும்.

மம்மட்டி வேலை, கோடாலி வேலை ஒருக்கா செய்தா கை காய்க்கும் அதை திருப்பத்திருப்ப செய்தா பழக்கப்பட்டு வரும். அதுபோலத்தான் மாட்டையும் தொடர்ச்சியாக பழக்கப்படுத்த வேணும். சவாரியில பாருங்கோ மாட்டுக்கு ஊசி குத்தக்கூடாது. கிடாய்களை பிள்ளை மாதிரி வளர்க்கிறம். ரத்தப்பலியை கொடுக்கக்கூடாது என்பதற்காகவே இவை தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆடு, மாடுகளுக்கு இராப்பகலா முட்டை,அந்தமா இந்தமா எல்லாம் கொடுத்துத்தான் வளர்க்கிறது பாருங்களேன் நாங்கள். பனடோல், தேயிலைச் சாயம், சோடா, சாராயம் சவாரிக்கு போகமுதல் கொடுக்கிறநாங்கள். அதாலதான் மாட்டுவண்டிச் சவாரிக்கு முன் அறிவிப்பாளர்கள் இப்படி - காளைகள் கடும் வேகமாக வருகின்றது விலத்தி நில்லுங்கள் கசிப்பை குடிச்சுப்போட்டு வருதுகள். சாராயம் குடிச்சு மதுபோதையில வருதுகள் என்று அறிவிப்பினம். இது தடையில்லை ஊசிக்குத்துக்குத்தான் தடை கண்டியளோ. ஆபத்தான விளையாட்டுத்தான் மாட்டுவண்டிச் சவாரி அதிக திறமையோடையும் ஆபத்தோடையும் நடந்து கொள்ள வேனும் என்று எம்முடன் பலவிடயங்களையும் தலந்துரையாடினார்

# பல்சமய வழிகாட்டிகளே சமுகத்தை வழிகாட்ட முன்வருவீரா?

எல்லோருக்கும் கடவுள் பயம் இருந்தது. அதுவே வழிகாட்டும் வாழ்வாக மனிதர்களை விட தெய்வ நம்பிக்கை எமது நாட்டில் பல்சமயங்களாலும் கட்டியெழுப்பப்பட்டதால் எல்லா சமய தலைவர்களின் வார்த்தை வழிபாடுகள் ஆன்மீக விழுமியங்களால் நல் வழிப்படுத்தப்பட்ட வழிபாட்டு முறமைகள் வேறுவடிவங்களாக இருந்த போதும் இறைபற்றும் மறை அனுபவங்களும் பெற்றோராலும் ஆன்மீகத் தலைவர்களாலும் கட்டி எழுப்பப்பட்டது.

இன்றைய நவநாகரிகம், நவீன தொடர்பு சாதனங்கள் அறிவியல் தேடல்கள், பல்வேறுபட்ட வழிகளில் மக்களின் மனங்களில் தேடல்கள் எதிர்பார்ப்புகள் அதிகரித்ததாலும், நாட்டுச் சூழல்கள், இடப்பெயர்வுகள், அழிவு இழப்புகளாலும் புதுப்புது சமய சபைகள், வழிபாட்டு முறைகளில் நாட்டம் கொண்டோர் ஒருசாரரும், சமய வழிகாட்டலின்மையில் சடங்குகளாக கேளிக்கை வேடிக்கை விழாக்களும் பொழுது போக்கை மாற்றிவரும் சூழலிலும் பக்தி முயற்சிகள் ஆன்மீக வழிகாட்டல் முறைமைகள், வழிபாட்டை வாழ்வாக்கிக் கொள்ளாத நிலைகளாலும் முன்னையோரின் ஆன்மீக பற்றுக்கள் பின்னையோருக்கு விளக்கமின்மை, ஆர்வமின்மை, நாட்டமின்மை, சமய விழுமியங்கள் நல்லொழுக்க வழிகாட்டலின்மையாலும் சிதைவடைந்து வருகிறது.

எப்படியும் வாழலாம் என்ற மனநிலையில் தமது வசதிக்கான வாழ்வியலில் ஆன்மிக அக்கறை குறைந்து வருதல் வழிகாட்டிகளின் அலட்சிய போக்கும் இளையவர்களின் ஆன்மீக ஆர்வமின்மையும் தவறான வன்முறையான ஆன்மீகபயமின்மையும் வழிதவறும் இளமையின் போக்கு தவறான திசை நோக்கி நகர இதனை சந்தர்ப்பமாக பயன்படுத்தி இலாபம் தேடும் உலக வர்த்தக போதை வியாபாரிகளின் முன் நகர்வுகள் தூரநோக்கில்லாது போராலும் இடப்பெயர்வுகளாலும் சிதறடிக்கப்பட்ட குடும்பக் கட்டமைப்பினை சாதகமாக பயன்படுத்தி சீர்கெட்ட சமுகத்தை விளக்கும் செயல்களை நிலைநாட்ட முற்படுவோருக்கு சாதகமாக அமைந்து விட்டது.

இதற்கு துணைபோகும் சிறுசிறு விற்பனையாளர்களாக பாமர மக்களையே பயன்படுத்தி சமுகத்தை சீரளிப்பதற்கு பலர் துணைபோவதால் பெரும் முதளைகள் சிக்குவதில்லை இதற்கு பொறுப்புக் கூற வேண்டிய வழிகாட்டிகள் தமது பொறுப்புக்களை ஏற்காத நிலையும் வழிகாட்டிகளே வழிதவறும் நிலையும் சொல்வதை செய்ய முடியாத முன்மாதிரிகள் அற்ற வழிகாட்டிகள் ஆன்மீகத் தலைவர்களாக குடும்பத் தலைவர்களாக மாறவிருக்கும் ஆன்மீக வழிகாட்டலை ஒரு தொழிலாக சிந்திப்போரும் பற்றற்ற பங்காளராக வருவாய்க்கு விலைபோகும் வழிபாட்டுத் தலங்களும் உண்மை எது பொய் எது என பகுத்துப் பாக்க முடியாது திண்டாடும் பொது மக்களுக்கு குளப்பத்தை ஏற்படுத்தும் தொடர்பூடகங்களின் திசைதிருப்பும் கேள்விகளும் நேரங்களை சூறையாடும் தொலைக்காட்சிகளும் ஆபாச கேளிக்கைகளும் ஆன்மீக புனிதத்தன்மையை சிதைத்துவிட காரணமாகியது.


ஆன்மீகம் பேசும் வழிகாட்டிகள் சகல மதத்தினரும் சமூக சீரழிவை கண்டும் காணாது ஒதுங்கி வாழ்வது நாட்டின் சீரற்ற சமுகத்தையே உருவாக்கலாம் இதனை பல் சமய தலைவர்களும் பொறுப்பேற்று உடன் சீராக்கல் முயற்சியில் பங்கேற்க முன் வருதலே இன்றைய காலத்தின் கட்டாயமாகும் இதனை தமது பகுதியை பாதுகாக்கும் திட்டங்களை அப்பகுதி ஆன்மீக தலைவர்கள் முன்னின்று செயற்பட முன்வர வேண்டும். என்பதே எதிர்பார்ப்புடனான தேவையாகும்.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இப்போது பலருக்கும் சப்புவதற்கு கிடைத்த அவல். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊத்தைகளை கழுவி ஊற்றுகிறார்கள் கம்பன் கழக ஜெயராசு முதல் கடை வீதிகளில் கூடக்கூடிய சமூகப் பெரியவர்கள் வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை கழுவி ஊற்றுகிறார்கள். இப்படியான ஒரு தருணத்தில் நம்பிக்கை தரக்கூடிய ஒளிக்கீற்றாக யாழ்ப்பாணப் பல்லைக்கழகத்தின் நாடகவிழா கடந்த மாதம் 19,20,21 ஆகிய திகதிகளில் இடம்பெற்று முடிந்திருக்கிறது.

ராஜ்குமார், தமிழ்த்துறை விரிவுரையாளரும், கோவலன் கூத்து நடிகருமான கணபதிப்பிள்ளை அருந்தாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர். தற்காலத்தில் கூத்துப்பிரதிகள் அதிகரித்துவிட்டன கூத்துப்பிரதிகளை கையில் வைத்திருந்தவர்கள் யாவரும் அண்ணாவியார்களாக மாறிவிட்டனர் என்றும் இதனால் கிராமங்களில் ஒழுங்கான கூத்தை காணமுடியவில்லை என கடுமையான விமர்சனத்தை முன்வைத்திருந்தார். இதேவேளை நிகழ்வில் கருத்துரைத்த ஆசிரியர் ராஜ்குமார் பாடசாலைகளில் நாடகங்களை நடாத்துவதற்கு பாடசாலை அதிபர்கள் மற்றும் பெற்றோர்களின் ஒத்துழைப்பு

சிறப்பான முறையில் அரங்கேறியிருந்தது. உறவுகள் நாடகம் வயிறு வெடிக்கும் அளவிற்கு சிரிப்பை ஏற்படுத்திய மிகச்சிறப்பான நாடகம். ஜஸ்ரினின் இயக்கதில் இடம்பெற்ற காத்தவராயன் சிந்துநடைக்கூத்து மற்றும் அரிச்சந்திர மயான காண்டம் என்பவை மிகச்சிறப்பாக இருந்தது. அரிச்சந்திர மயான காண்டத்தில் அரிச்சந்திரனுக்கு நடித்தவரிடம் அரிச்சந்திரனின் உணர்வைக் காணமுடியாவிட்டாலும் நாடகத்தில் குறை என்று இல்லை. ஒட்டுமொத்தத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையின் மிகப்பெரும் வெற்றி என இந்த நாடக விழாவைச் சொல்ல முடியும்.

# நம்பிக்கையூட்டிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நாடகவிழா





ச.திருச்செந்தூரன்
தமிழ்த்துறை,
யாழ்.பல்கலை.



ஏறத்தாழ 35 ஆண்டுகளிற்கு பின்பு இந்த நாடகவிழா நடைபெற்று முடிந்திருப்பதோடு மட்டுமல்லாமல் அது தந்த புத்துணர்ச்சி மற்றும் சமூகத்திற்கு சொன்ன செய்திகள் மிக அதிகம். பொதுவாக நாடகக் காரர்களை கூத்தாடிகள் என்று சமூகத்தில் விழிப்பது வழக்கம். கூத்தாடுபவனிற்கு பெரும்பாலும் சமூக அங்கீகாரம் கிடைப்பதில்லை. கூத்தாடுபவனிற்கு மேடையில் மட்டும் அங்கீகாரம் வாழ்க்கையில் இந்த அங்கீகாரம் கிடைப்பதில்லை.

இந்த வழக்கமே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் தொடர்கின்றது. அதேவேளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சமூகவியல், உளவியல், மொழிபெயர்ப்பு, திட்டமிடல், புவியியல், பொருளியில் போன்ற பாடங்களை முண்டியடித்து கற்கைநெறியாக தேர்ந்தெடுப்பது போன்று நாடகம், தமிழ் போன்ற பாடங்களிற்கு மாணவர்கள் செல்வதில்லை. ஒரு சமூகத்தினை உளவியல் ரீதியாகவும், அறிவுபூர்வமாகவும் ஆற்றுப்படுத்தக்கூடியவல்லமை நாடகத்துறைக்கு உண்டு. இதனை கடந்த காலங்களில் குழந்தை ம.சண்முகலிங் கத்தின் நாடகங்கள் உள்ளிட்ட மேடையேற்றப்பட்ட நாடகங் களின் துணைக்கொண்டு புரிந்துகொள்ள முடியும்.

போதிய வகுப்பறை வசதி இன்மை உள்ளிட்ட பௌதீக, மானிட வளங்களின்றி இந்தத்துறை இயங்கி வந்தது. இதுவரை காலமும் கண்டு கொள்ளப்படாமல் இருந்த நாடகத்துறை,இந்த நாடக விழாவின் மூலம்,

கிடைப்பதில்லை எனவும் இதனால் பாடசாலைகளில் நாடகத்தை வளர்த்தெடுப்பது சவாலாக உள்ளது எனக் குறிப்பிட்டார்.

மூன்றாம் நாள் கலந்துரையாடலில் பராக்கிரம நெரியல்ல, நீக்கிலாப்பிள்ளை மரியசேவியர் அடிகளார், விரிவுரையாளர் ரதிதரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர். இக்கலந்துரையாடலில் கருத்துரைத்த பராக்கிரம நெரியல்ல,தற்காலத்தில் அரசாங்கம்



நாடகத்துறைக்கு பெரிதாக பங்களிப்புச் செய்வதில்லை என்றும் நாடகத்துறை ஒரு சில முதலாளிகளின் கைகளுக்குள் சிக்கியிருக்கிறது எனக் குறிப்பிட்டதுடன் நாடகத்துறையின் தற்கால சவால்கள் குறித்தும் பல்வேறுபட்ட கருத்துக்களை தெரிவித்தார்.

குழந்தை ம.சண்முகலிங்கத்தின் எந்தையும் தாயும் நாடகத்தை மக்கள் களரியின் இயக்குனர் பராக்கிரம நெரியல்ல "ஹிரு நோனாகே" என சிங்கள மொழியில் நெறியாள்கை செய்திருந்தார். இந்த நாடகம் நடிப்பின் உச்சத்தை தொட்டிருந்தது. இதேபோல் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் "சுந்தரம் எங்கே" என்ற நாடகத்தினை பல்கலைக்கழகத்தின் நாடகத்துறை மாணவர்கள் மிகநேர்த்தியாக நடித்திருந்தனர். வசந்தன்

மிக நேர்த்தியான ஒலி,ஒளியமைப்பு, அரங்க அமைப்பு என்பவை நாடகத்தின் இயங்காற்றலை இன்னும் அதிகரித்திருந்தது. தொலைக்காட்சி மற்றும் சீரியல் நாடகங்கள் மற்றும் திரைப்படங்கள் ஆகியவற்றின் ஆதிக்கம் நாடகம் பார்ப்பவர்களின் எண்ணிக்கையை குறைத்துவிட்டது. நாடக ரசிகர்கள் குறைந்து விட்டார்கள் என்றெல்லாம் மக்களிடையே கருத்துக்கள் உலவும் வேளையில் இப்படியான கருத்துக்களை இந்த நாடகவிழா பொய்ப்பித்திருந்தது மொத்தத்தில் இந்த நாடகவிழா அரங்கு சார்ந்து இயங்குபவர்களிற்கும் ரசிகர்களுக்கும் ஒரு நம்பிக்கையை தந்திருக்கிறது. மொத்தத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறை தலைவர் சனாதனன் மற்றும் நாடகம் மற்றும் அரங்கியல்துறை விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களுக்கும், நாடகச்



செய்றபாட்டாளர்களிற்கும் நாடகக் கலைஞர்களிற்கும் கௌரவிக்கப்பட்ட ஆங்கில புத்தாக்க அரங்கவியலாளர் ஏனஸ்ட் தளையசிங்கம் மக்கின்ரயர், கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம், அருட்திரு நீக்கிலாப்பிள்ளை மரியசேவியர் அடிகளார் போன்றவர்களிற்கு யாழ் களரியின் மிகப்பெரும் சல்யூட்.

## நற்பணி சாதனையாளர் விருது"2019"

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த இளையோர் மற்றும் சமூகசேவை ஆர்வலர்களே!
உங்களை சாதனையாளர்களாக உருவாக்கி **"வடக்கின் சாதனையாளர் நற் பணி விருது" "கிழக்கின் சாதனையாளர் நற்பணி விருது"** என்ற பிரிவுகளில் 10,000 ரூபா பணப்பரிசும், நினைவுக் கேடயமும், சான்றிதழும் வழங்கி மதிப்பளிக்கும் செயல்திட்டம்

**இந்தப் பலப்பரீட்சையில் பங்குபற்ற நீங்கள் தயாரா........ மேலதிக விபரங்களைப் பெற விண்ணப்பியுங்கள்**

**077-6510375**
இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையம்
28/1, ஏ.வி வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் காணாமல் போன உறவுகளுடன் காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தின் சந்திப்பில்

## "மரணச் சான்றிதழ் வேண்டாம், நிவாரணமும் வேண்டாம், எம் பிள்ளைகளை விடுதலை செய்யுங்கள்"

என்று கோஷமிட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கண்ணீர்ப் போராட்டத்தை எதிர் கொண்ட காணாமல் போனோர் அலுவலகப் பிரதிநிதிகள்







## சிவகுரு சிவக்குமாருடன் யாழ்களரியின் சந்திப்பு




## தேசிய கால்ப்பந்தாட்டப் போட்டியில் இரண்டாமிடம் பெற்ற இளவாலை ஹென்றிஸ்



## யாழ்ப்பாண றோட்டறிக் கழகத்தால் நாவற்குழிக் கிராமத்தில் நடத்தப்பட்ட சிரமதானம்



இப்பத்திரிகை [illegible] கே.கே.எஸ். வீதியிலுள்ள முத்து பிறிண்டேர்ஸ் நிறுவனத்தில் 01.08.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பெற்றது